Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 28 திங்கட்கிழமை (13-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:284

## படிமுறைகளைத் தயாரிக்கு முன்னர்

# நோர்வேயுடன் மீண்டும் அரசு பேச்சு நடத்தும்

## சில விடயங்களில் தெளிவு பெற

கொழும்பு,நவம்பர்13

**அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கான படிமுறைகளை (MODALITIES) வகுப்பதற்கு முன்னர் நோர்வேயிடமிருந்து சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. அதற்காக அரசாங்கம் மீண்டும் நோர்வே அரசுடன் பேச்சு நடத்த உள்ளது.**

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் விவசாய அமைச்சருமான டி.எம்.ஜயரத்னா இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.**

பொ.ம.ஐ.முன்னணியின் பிரதான கட்சியாக விளங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் நோர்வேயின் சமாதான முயற்சி குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விவரித்தார்.

அது குறித்துக் கேட்கப்பட்டபோதே அமைச்சர் ஜயரத்னா மேற்கண்ட தகவலைத் தெரிவித்ததாக 'சண்டே ஒப்சேவர்' செய்தி வெளியிட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தவறுதலான குண்டு வெடிப்பில் இளைஞன் பலி

மட்டக்களப்பு,நவ.13

மட்டக்களப்பு மாவட்டம் செட்டிப்பாளையம் பகுதியில் நேற்றுமுற்பகல் இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவமொன்றில் ஈ.பி.டி.பி. ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்தார்.

விக்கி என அழைக்கப்படும் பத்மநாதன் திவாகரன் (வயது 23) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். அவரிடமிருந்த கிரனேட் தவறுதலாக வீழ்ந்து வெடித்ததனாலேயே அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் ராஸிக் குழு உறுப்பினரான இவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் தம்முடன் இணைந்து செயற்பட்டார் என மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7-21)

## ஆனையிறவு வெற்றிச் சமர்; லண்டனில் திரைப்படக்காட்சி

லண்டன்,நவ.13

கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற ஆனையிறவுப் படைத்தளம் மீதான புலிகளின் தாக்குதல் தொடர்பான திரைப்படத் தொகுப்பு லண்டனில் திரையிடப்பட்டுவருகிறது.

பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் 'ஆனையிறவு வெற்றிச் சமர்' திரைப்படம் காண்பிக்கப்படுகின்றது.

இந்தத் திரைப்படம் பற்றிய கண்கவர் சுவரொட்டிகளையும் லண்டனில் புலிகள் வெளியிட்டுள்ளனர். திரைப்படம் காண்பிக்கப்படும் இடம், நேரம் போன்ற விவரங்கள் அவற்றில் இடம்பெற்றுள்ளன.

இத் திரைப்படத்தைப் பார்க்க லண்டனில் வாழும் தமிழர்களும் பிரிட்டிஷ் மக்களும் கூட முண்டியடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வார இறுதியில் வடக்கு லண்டனில் உள்ள இரண்டு பிரிட்டிஷ் பாடசாலை மாணவர்களுக்கு இத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. இதன்மூலம் பல லட்சம் ரூபா நிதி சேர்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## மலையகத் தமிழர்களுக்கு விசேட அடையாள அட்டை

### விரைவில் வழங்க அரசு திட்டம்

கொழும்பு,நவ.13

இந்திய வம்சாவளியினரான மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றி பொலீஸாருடனும் மலையகத் தோட்டத்துறை அதிகாரிகளுடனும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக பொ.ஐ.முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்னா தெரிவித்துள்ளார்.

இந்த விசேட அடையாள அட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் தரப்பில் இதுவரை 15 ஆயிரம் போராளிகள் உயிரிழப்பு!

மட்டக்களப்பு,நவ.13

தமிழீழப் போராட்டத்தில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் இதுவரை உயிர்த் தியாகம் செய்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மாவீரர் நாள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் வழமைபோல் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரத்தில் மக்கள் பொது இடங்களைச் சிரமதானம் மூலம் சுத்தப்படுத்தல், மரநடுகைப் பணிகளைச் செய்தல், உயிர்க் கொலைகளைத் தவிர்த்தல், தானதர்மங்களைப் புரிதல், மது அருந்துவோர் அதை விலக்கிக் கொள்ளல், சினிமா உள்ளிட்ட இன்னும் பிற கேளிக்கை நிகழ்ச்சிகளைத் தவிர்த்தல், ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மாவீரர்களின் இலட்சிய ஈடேற்றத்துக்காக பிரார்த்தித்தல் போன்ற கைங்கரியங்களில் ஈடுபட வேண்டும் என்று அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-21-3-8)

## வாகரையில் 2 இளைஞருக்கு புலிகள் மரண தண்டனை!

மட்டக்களப்பு,நவ.13

வாகரைப் பகுதியில் வைத்து இளைஞர்கள் இருவருக்கு விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பாலியல் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்ட இரு இளைஞர்களுக்கே நேற்றுமுன்தினம் புலிகள் மரண தண்டனையை நிறைவேற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகரை, கதிரவெளி ஆகிய இடங்களைச் சேர்ந்த இந்த இரு இளைஞர்களும் கடந்த சில மாதங்களாக விடுதலைப் புலிகளால் விசாரிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-21)

## இடைக்கால சபையை நிராகரிக்க கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் முடிவு!

கொழும்பு,நவ.13

வடக்கு - கிழக்கில் அரசாங்கம் அமைக்க உத்தேசித்துள்ள இடைக்கால நிர்வாக சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸும் முடிவு செய்துள்ளன.

விடுதலைப் புலிகளின் ஆதரவின்றி அமைக்கப்படும் இந்தச் சபையில் இணைந்து கொள்ளப்போவதில்லை என்றும் அவை தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் வடக்கு - கிழக்கில் எந்த நிர்வாகமும் மேற்கொள்ள முடியாது. எனவே விடுதலைப் புலிகளின் 'ஒத்துழைப்பு' இல்லாமல் அமையும் இடைக்கால நிர்வாக சபையால் எதையும் சாதிக்க முடியாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசிக்காமல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம் பாரிஸில்

கொழும்பு,நவ.13

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெறவுள்ளது.

அடுத்த வருடம் இலங்கைக்கு மேற்கு நாடுகள் வழங்கவுள்ள உதவிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட இருக்கிறது.

நாட்டில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் இம்முறை அரசுக்கு நேரடி அழுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன விறகுவெட்டிகள் திரும்பினர்

மட்டக்களப்பு,நவ.13

மட்டக்களப்பு கோப்பாவெளிப் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் தம்பிட்டிய காட்டுப்பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற சமயம் காணாமல்போன 15 தமிழர்களும் நேற்று நண்பகல் விசேட அதிரடிப் படையினரால் விடுதலை செய்யப்பட்டனர்.

விறகு வெட்டச் சென்ற இவர்களை மகாஓயா விசேட அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த படையினர் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் விடுதலை செய்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-21-6)

## கடற்கொந்தளிப்பு காரணமாக

## காங்கேசன்துறையில் வைத்து பயணிகளை ஏற்ற யோசனை

கொழும்பு,நவ.13

திருமலைக்கும் - பருத்தித்துறைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' மற்றும் நோயாளர் சேவையில் ஈடுபடும் 'ஜயா கோல்ட்' ஆகிய கப்பல்களில் பயணம் செய்வோரை காங்கேசன்துறையில் வைத்து கப்பல்களில் ஏற்ற ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியவருகிறது.

இந்தக் கப்பல்களுக்கு வழித்துணை வழங்கிவரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கடல் கொந்தளிப்பு காரணமாக, இந்தக் கப்பல்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

பருத்தித்துறையில் கப்பல்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(12-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 633,553**

# வன்னிக்கு மருந்து அனுப்பக் கோரிக்கை

கொழும்பு,நவ.13

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உரிய காலத்தில் போதியளவு மருந்துப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு அனுமதியளிக்கவேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி பிரதமர் ரத்னசிறிவிக்கிரம நாயக்கவிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றையும் அவர் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் மருந்துப் பொருள்களுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் அவசர நோயாளர்கள் பலர் போதிய சிகிச்சை வசதி இன்றி மரணமடைய நேரிடுகின்றது.

பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி அளிக்கப்பட்ட மருந்துப் பொருள்களைக் கூட முழு அளவில் வன்னிக்கு எடுத்துச் செல்வதை சோதனை நிலையங்களில் உள்ள படையினர் தடுத்து வருகின்றனர். அனுமதிக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் முழுவதையும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கினால் அங்கு மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாது. இதேவேளை வன்னிக்கு என்று அனுப்பப்பட்ட இரண்டாவது மூன்றாவது தொகுதி மருந்து வகைகள் களஞ்சியங்களில் கிடந்து வீணாவதுடன் பாவனைக்கு உதவாதவையாகவும் ஆகிவருகின்றன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கணனித்துறை உதவி விரிவுரையாளர்

**திரு. தி. அருட்செல்வம்**

அவர்களின் அன்புச் சகோதரர்

**தி. தவச்செல்வம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**துறைத் தலைவர்,**
**விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள்,**
**கணனி விஞ்ஞானத்துறை / கணனி அலகு,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(80496)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் தலைவர்

**திரு. ஆ. சத்தியமூர்த்தி**

அவர்களின் அன்புத் தந்தையாரான

**சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை**

அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்.

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்**
**விளையாட்டுக் கழகமும், கொக்குவில்.**

(80491)

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளரும், தற்போதைய நிர்வாக சபை உறுப்பினருமான

**திரு. ஆ. சத்தியமூர்த்தி**

அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை**

(சங்கிலியன் தோப்பு)

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(C/13811)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 28 - 05 - 1940



உதிர்வு 14 - 10 - 2000

### அமரர் ஆறுமுகம் கந்தையா

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் அமரர் ஆறுமுகம் கந்தையா அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் எங்கள் நன்றியைத தெரிவிப்பதுடன்

இன்று (13.11.2000) திங்கட்கிழமை எமது தற்போதைய இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*விளையாட்டரங்க வீதி,*
*கல்வியங்காடு.* (80485)

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## இருவருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,நவ.13

சைக்கிள் திருட்டு தொடர்பாக யாழ்.பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களை தலா 5 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல நீதிவான் இ.த.விக்னராஜா அனுமதித்தார்.

கோண்டாவிலைச் சேர்ந்த சண்முகராசா சசிகரன், ராஜகாரியர் துரைராஜா ஆகியோரே கைதுசெய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-5-6)

## உடுவிலில் விவசாய சமாச பொதுக்கூட்டம்

மானிப்பாய்,நவ.13

இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் விவசாய சம்மேளனங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் சமாசத்தலைவர் சி. திருக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் "விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினை கள்" பற்றி பெரும்பாக உத்தியோகத்தர் பொ.குகநாதன் விளக்குவார்.

சகல சம்மேளனங்களினதும் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-90)

## டிறிபேக் மாணவர்களுக்கு அடையாள அட்டை

யாழ்ப்பாணம்,நவ.13

இந்த வருடம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் புதிதாகச் சேர்ந்த 6ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக மாணவர்களையும் பெற்றோர்களையும், இம்மாதம் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கோண்டாவிலில் கல்லூரி தற்காலிகமாக இயங்கிவரும் நிரு கல்வி நிலையத்தில் சமுகமளிக்கும் படியும்

வடமராட்சியில் கல்வி கற்று வரும் டிறிபேக் கல்லூரிப் புதிய மாணவர்களும் பெற்றோரும் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சமுகமளிக்கும் படியும்

கல்லூரி அதிபர் எம்.நாகேந்திரராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (இ-3)


**ராஜா யாழ்ப்பாணம்**

பிரசாந், ரம்பா, ராதிகா, மணிவண்ணன், மற்றும் பலரின் நடிப்பில்

**பூமகள் ஊர்வலம்**

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)

(C/1848)

**நாகம்ஸ் சுன்னாகம்**

அஜித் (இரு வேடம்), சிம்ரன், விவேக் நடித்த

**வாலி**

(ரீமேக்ஸ்)

காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே)

(C/1816)


# மரண அறிவித்தல்கள்

## கந்தர் முருகேசு

12-11-2000 'உதயன்' பத்திரிகையில் வெளியான மரண அறிவித்தல் விளம்பரத்தில் (பக்கம் 9இல்) பேரப்பிள்ளைகளான கல்பனா, சஜீபனா, துசிந்தன் ஆகியோரின் பெயர்கள் தவறவிடப்பட்டுள்ளன. அவற்றையும் சேர்த்து வாசிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*புகையிரத நிலைய வீதி,*
*சுன்னாகம்.* (80489)

தகவல்:
**பரமசாமி** (மகன்)

## அமரர் முத்து விசுவலிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து விசுவலிங்கம் சனிக்கிழமை இரவு (11.11.2000) உரும்பிராயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து நாகம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக்கணவரும், விஜய ரூபி(சுவிஸ்), சிவலோகநாதன்(கனடா), இன்பராணி(கனடா), திரவியராணி (கனடா), சந்திரலீலா (பிரான்ஸ்), கலாநிதி(உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன்(சுவிஸ்), எலிசபெத்(கனடா) மற்றும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கந்தசாமி(கனடா), அன்ரனி (பிரான்ஸ்), கமலநாதன்(மில்க்வைற் கம்பனி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், வதனகுமார், சிவகாமி, சிறிராஜ், கஸ்தூரி, கங்கா, சுதன், காயத்திரி, ஜெரோம், ஜெறா, பேசுவா, கீர்த்தனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று (12.11.2000) 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் குயிலங்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*ஞானவைபிரவர் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (80475)

தகவல்:
**கமலநாதன்** (மருமகன்)

## வைரமுத்து நாகலிங்கம்

கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரமுத்து நாகலிங்கம் 11.11.2000 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, முத்துலிங்கம் மற்றும் கண்மணி, பூரணம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நாகம்மா, நாகராஜா, கந்தசாமி, காலஞ்சென்ற கணேஸ், அன்னலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் சூரியபாலன் (நோர்வே), காசிஆனந்தன் (இந்தியா), சத்தியானந்தன், சிவானந்தன், கலா ஆகியோரின் தந்தையும் யோகராசா, காந்தன், ரூபன், சியாமளா, ஜெயனந்தினி, சுபாந்தினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரி[illegible]ள் இன்று (13.11.2000) திங்கட்கிழமை 12 மணியளவில் நடைபெ[illegible] தவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு [illegible]த்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உ[illegible]ார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு [illegible]க்கொள்கிறோம்.

*பிரம்படி லேன்,*
*கொக்குவில்.* (80482)

தகவல்:
**சத்தியானந்தன்** (மகன்)

## சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை

**(இளைப்பாறிய சங்கீத போதனாசிரியர் (வீணை) - நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)**

ஆசிரியர் சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை அவர்கள் 12-11-2000 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்புமருமகனும், சிவயோகத்தின் அன்புக் கணவரும், சத்தியதேவி(கனடா), சத்தியசீலன்(இந்தியா), சத்தியமூர்த்தி (மக்கள் வங்கி - சுன்னாகம்), காலஞ்சென்ற சத்திய நாராயணன் மற்றும் சத்தியகௌரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவானந்தராசா(கனடா), தயாளன்(டென்மார்க்), யாழினி (கனடா), சிவகலா, ரவிசங்கர், சிவரூபி, கஜன், நிசாந் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, முருகேசம்பிள்ளை, செல்லத்துரை, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் கந்தசாமி (வைத்திய அதிகாரி - யாழ்.போதனா வைத்தியசாலை) தங்கரெத்தினம், செல்வம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், சத்தியவான், சத்தியதேவன், சத்தியவதி, சுந்தரதாஸ், பேரின்பராணி ஆகியோரின் சிறிய தந்தையாரும், சுரேஸ், சுதர்சன், நிந்துஜா, கனிஜா, சிவதர்சினி, விதுசன், சாயிசன், நிரோஜன், சாருசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-11-2000) திங்கட்கிழமை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*முத்திரைச் சந்தையடி*
*(சங்கிலியன் தோப்பு முன்பாக),*
*நல்லூர்.* (80487)

தகவல்:-
**சத்தியமூர்த்தி** (மகன்)
(மக்கள் வங்கி - சுன்னாகம்)

## திருமதி யோகானந்த ஈஸ்வரக்குருக்கள் நாகரத்தினம்மா

கைதடி இணுங்கித் தோட்டத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற யோகானந்த ஈஸ்வரக்குருக்கள் அவர்களின் அன்பு மனைவி நாகரத்தினம்மா நேற்று (12-11-2000) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசாமி கோயில் பிரதம குரு குருசாமிக்குருக்கள் இராஜேஸ்வரிஅம்மா, இரத்தினேஸ்வரிஅம்மா, ஜெகதீஸ்வரிஅம்மா, அன்னபூரணி அம்மா, சாந்தம்மா, பத்மாவதிஅம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராஜா ஐயர் (பூநாறிமடம்), சுப்பிரமணியக் குருக்கள் (கோண்டாவில்), விஸ்வநாதக்குருக்கள் (நயினாதீவு), நித்தியானந்த சர்மா (திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், உமாசுத சர்மா (கொக்குவில்), சண்முகபவசர்மா (கொக்குவில்), கிருத்திகசர்மா, (கொக்குவில்), சக்திகதாரணி, சுகன்யா ஆகியோரின் அன்புப் பாட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-11-2000 நேற்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கைதடி வாழ் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**யோ. குருசாமிக்குருக்கள்** (மகன்)

இல.115, கே.கே.எஸ்.றோட்,
கொக்குவில். (80490)

# அளவெட்டி மகப்பேற்று விடுதி வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு

**திறப்புவிழா சிறப்புமலர் 13-11-2000**

## அரசினர் வைத்தியசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அளவெட்டியில் வாழ்ந்த சமூக நலன் விரும்பிகளால் அளவெட்டி அரசினர் வைத்தியசாலையும் அளவெட்டி தபாற்கந்தோரும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இரண்டும் ஆரம்பகாலத்திலிருந்து வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வந்தன. தபாற்கந்தோர் இன்னும் தனக்கெனச் சொந்தக் காணியும் கட்டடமுமின்றி வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. ஆனால் வைத்திய சாலை அந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் மகப்பேற்று நிலைய மொன்றைச் சொந்தக்காணியில் பெற்றுக் கொண்டது. அந்த மகப் பேற்று நிலையம் காலத்துக்குக் காலம் விஸ்தரிக்கப் பட்டதோடு மருந்தகமும் அதனுடன் இணைக்கப்பட்டது.

இன்று அளவெட்டி அரசினர் வைத்தியசாலை மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் என்ற பெயரிலேயே இயங்கி வருகி றது. இந்த வைத்தியசாலைக்குத் தேவைப்பட்ட காணி ஒன் றைக் கனடாவில் வாழும் அளவெட்டி மக்கள் வாங்கித் தந்த தன் மூலம் காலத்திற்கேற்ற உதவி புரிந்துள்ளனர். அது ஒன்று மட்டுமல்ல அரசினரால் ஆரம்பித்து முடிவு பெறாத கட்டடமொன்றைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்கள் உதவிய

**பண்டிதர் க.நாகலிங்கம்**
**தலைவர், நோயாளர் நலன்புரிக் கழகம்**

தன் மூலம் அளவெட்டி மண்ணின் மைந்தர்களாம் பெருமை யையும் தமதாக்கிக் கொண்டனர்.

கனடா வாழ் அளவெட்டி மக்களோடு பிறநாடுகளில் வாழும் அளவெட்டி அன்பர்களும் இந்த வைத்தியசாலைக்குக் கைகொடுத்துதவ முன்வந்துள்ளமை பாராட்டுதற்குரியது. எனினும் முதலில் வைத்தியசாலையை வளர்க்க உந்து சக்தியாக நின்ற கனடா வாழ் அன்பர்களில் முன்னாள் அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆசிரியர் திரு.ச.பரநிரு பசிங்கமும், அளவெட்டி பெருமாக்கடவையைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்மநாதன் சிதம்பரசிவன் என்பவரும் செய்த உதவி பாராட்டி அமையாது.

நமது முன்னோர் தந்த வைத்தியசாலையின் பயனை எமது கிராமமும் அயற்கிராமங்களும் பெரிதும் பயன்படுத்தி வருகின்றன. வெளியூர்களிலுள்ள பெரிய வைத்தியசாலைக ளுக்குச் சென்று சிகிச்சை பெறுவதில் உள்ள சிரமம் அவசரகாலச் சட்டமும் தடை முகாம்களும் உள்ள இன்றைய நிலையில் மிகமிகப் பெரிது என்பது அனைவரும் அறிந்ததே.


இந்த வைத்தியசாலையின் பயன்பாடு மிகமிகப் பெரிது என்பதை வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் எண்ணிக்கை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இத்தகைய வைத்தியசாலை வெளிநாட்டு தொண்டு நிறுவனம் (U.N.D.P) ஒன்றின் உதவி யுடன் சிறந்த கட்டட வசதியையும் பெற்றுள்ளது. வெளி நாட்டில் வாழும் அளவெட்டி மக்களின் உதவியுடன் கட்டப் பட்ட கட்டடமும் மற்றைய கட்டடமும் இன்று 13-11-2000 அன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த வைத்தியசாலையின் உள்ளக வீதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.உ.பாஸ்கரன் வழங்கிய நிதி யுதவியால் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. வைத்தியசா லைக்கு நாற்புறமும் மதில் கட்டப்படாமலும் வைத்தியசாலை தரமுயர்த்தப்படாமலுமுள்ளமையே இன்றுள்ள பெருங் குறை யாகும்.

எமது வைத்தியசாலைக்குப் பின் தோன்றிய வைத்திய சாலைகள் தரமுயர்ந்து பற்பல வசதிகளையும் பெற்று நிற்க, எமது வைத்தியசாலை மட்டும் தரமுயர்வு பெறாதிருப்பது வேதனைக்குரியது. இந்த வைத்தியசாலை தரமுயர வைத்தியசாலைக் கட்டடத் திறப்புவிழா வழிகாட்ட, வேண்டு மெனப் பிரார்த்திப்போம்.

இந்த வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் வை. யோகேஸ்வரன் அவர்களின் அரும்பெருந் தொண்டே வைத் தியசாலைக்கு நோயாளர் பெரும் எண்ணிக்கையில் வந்து சேர வழிவகுத்துள்ளது. நோயாளர் நலன்புரிக் கழகமும் அவ ரது வழிகாட்டலிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வைத் தியசாலை தரமுயர்வதற்கு இதுவரையும் மக்கள் தோள் கொடுக்காத குறையைப் போக்குவதே நலன்புரிக் கழகத் தோற்றத்துக்கு முக்கிய காரணமென்பது எமது கருத்து.

இந்த வைத்தியசாலை வளம்பெற உழைக்கும் வைத்தியர் திரு.யோகேஸ்வரனுடைய நற்பணிக்கு முத்திரை பதிப்பது போல அவர் காலத்திலேயே வைத்தியசாலை அடுத்த படிக் குக் காலெடுத்து வைத்துத் தரமுயரப் பணி செய்யச் சேர வரும்படி அரசாங்க அதிகாரிகளே கிராம நலன்புரி பெரியோர் களே என அனைவரையும் இருகையும் நீட்டி அழைக்கின் றோம். நிதியுதவி வழங்கும் அனைவரையும் நினைவு கூரு வோம்.





அளவெட்டி அரசினர் வைத்தியசாலையில் இன்று திறந்து வைக்கப்பட உள்ள கட்டடங்களைப் படங்களில் காணலாம்.

## வைத்திய அதிகாரியின் வாழ்த்துச் செய்தி

அளவெட்டி மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனையும் அளவையூர் மக்களுக்கு நீண்ட காலமாக அயராத சேவை செய்யும் நிலையங்களாக திகழ்ந்தன. துரதிர்ஷ்டவசமாக நாட்டுச் சூழ்நிலைகளால் பல சேதங்களையும் தாங்கி பொலி விழந்து நின்றன.

அரச உதவியுடனும், வெளிநாட்டில் வாழும் அளவையூர் அன்பர்கள் உதவியுடனும் இந் நிறுவனம் இழந்த பொலிவை மீண்டும் பெற்றுள்ளது. நீண்ட நாள்களாக நிறைவடையாது அத்திவாரத்துடன் நின்ற வெளிநோயாளர் பிரிவும், UNDP ஆதரவுடன் நிறைவடைந்த நவீன வசதிகள் கொண்ட மகப் பேற்றுமனையும் புதுப் பொலிவுடன் திகழ்வது கண்டு மனம் மகிழ்கிறேன். புத்தாயிரமாம் ஆண்டின் புத்துணர்வு பெற்ற நிறுவனம் தன்னிகரற்ற சேவை செய்யும் வைத்திய நிலைய மாக திகழ வாழ்த்துகிறேன்.

- Dr.வை.யோகேஸ்வரன்

## பிரதி மாகாணப் பணிப்பாளர் வாழ்த்து

பல வருடங்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இரு இடங்களில் இயங்கி வந்த வெளிநோயாளர் பிரிவும், மகப் பேற்றுமனையும் புத்தாயிரமாம் ஆண்டில் புதுப்பொலிவுடன் ஒரே இடத்தில் அமைந்துள்ளது கண்டு மகிழ்கிறேன்.

யுத்த சூழ்நிலைகளால் இடிபாடுகள் அடைந்த கட்டடம் திருத்தப்பட்டு புதிய மருந்தகமும், புதிய மகப்பேற்றுமனையும், போக்குவரத்துச்சாலை என்பன அமைந்து மணப்பெண்ணின் பொலிவுடன் திகழ்வது கண்டு பூரிக்கிறேன். அளவெட்டி மத்திய மருந்தகமும், மகப்பேற்றுமனையும் மேலும் வளர்ச்சிய டைந்து அளவையூர் வாழ் மக்களுக்கு அயராத சேவை செய்ய வாழ்த்துகிறேன்.

- Dr.(செல்வி) உ.சிவபாதசுந்தரம்

## நன்றி நவில்கிறோம்

அளவெட்டி அரசினர் மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் புதிய கட்டடங்களை சைவ ரீதியாகத் திறந்து வைக்கும் இன்றைய நன்னாளில்,

- பிரதி மாகாணப் பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட முகாமையாளர்
- மேலதிக அரசஅதிபர், பிரதேச செயலர் - வலி.வடக்கு
- தலைவர், பிரதேச சபை, வலி.வடக்கு.
- அளவை மண்ணின் மைந்தனான முன்னாள் பா.உ. அவர்கள்
- வைத்திய அதிகாரி
- டாக்டர், அளவெட்டி அ.ம.ம.ம.பேற்று நிலையம்.
- வெளிநாடுகளில் வாழும் அளவெட்டி நலன் விரும்பிகள்.
- கட்டட ஒப்பந்தகாரர்கள்
- வைத்தியசாலை ஊழியர்கள்

**ஆகியோருக்கு எமது மனங்கனிந்த நன்றிகள்.**

*செயலாளர்*
*நோயாளர் நலன்புரிக்கழகம்.*

**மலர் அமைப்பு:**
நோயாளர் நலன்புரிக் கழகம்,
அளவெட்டி.

(C/13809)

## யாழ். செயலகத்தில் நவம்பர் நிவாரணம் குறித்து இன்று ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13

நவம்பர் மாத நிவாரணப் பொருள் களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசிப்பதற்காக அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் ஆகி யோர் தத்தமது சங்கங்களில் உள்ள அரிசி, பால்மா, சீனி மற்றும் பருப்பு ஆகியவற்றின் கையிருப்பு விவரங்க ளுடன் இன்று திங்கட்கிழமை முற் பகல் 10 மணிக்கு யாழ். செயலகத் தில் இடம்பெறும் கூட்டத்தில் தவ றாது கலந்து கொள்ளும்படி மேல திக அரசாங்க அதிபர் திரு.வைத்தி லிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி கூட்டத்துக்கு, அனைத்து பிரதேசச் செயலாளர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் ஆகி யோரையும் சமுகமளிக்கும்படி கோரப் பட்டுள்ளது.

(இ-ஒ)

## வயோதிபர் உட்பட 9பேர் குளவி கொட்டிக் காயம்

நெல்லியடி,நவ.13

நிலத்தில் வீழ்ந்து கிடந்த குள விக் கூட்டிலிருந்து வெளியேறிய குள விகள் அப்பகுதியால் சென்றோரை, கண்டபடி கலைத்துக் கலைத்துக் கொட்டின. இதனால் 5 வயோதிபர் கள் உட்பட 9பேர் காயம் அடைந்து மருந்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக் கிழமை காலை 10 மணியளவில் புலோலி ஆனைவிழுந்தான் சந்தி யில் இடம்பெற்றது.

இப்பாதையூடாக சென்று கொண் டிருந்தவர்களான க.ஸ்ரீதரன் (வயது 22,கரவெட்டி),த.பெருமாள்(வயது 61, கரவெட்டி),சி.தருமலிங்கராசா(வயது 42, கற்கோவளம்), நா.அப்புக்குட்டி (வயது 64, காரணவாய், மீன் வியா பாரி),வ.சின்னக்குட்டி(வயது 58, துன் னாலை வடக்கு), வ.சோமசுந்தரம் (வயது 64, கற்கோவளம்), க.நவரத் தினம் (வயது 53,துன்னாலை),சி.வேல் முருகு (வயது 37, கரவெட்டி), க. கணேசலிங்கம் (வயது 15, தும் பளை) ஆகிய 9 பேரும் கண்கள், முகம், கழுத்து பகுதிகளில் குள விகளினால் கொட்டி மந்திகை மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

(இ-109)

## சிப்பாய்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

நெல்லியடி,நவ.13

யுத்த சூழ்நிலைப் பிரதேசமான சாவகச்சேரிப் பகுதியில், உள்ள இந் துக்கல்லூரியில் இருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தை திருடிய குற்றச்சாட் டில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரு இராணுவ சிப்பாய்களைத் தொடர்ந்து இம் மாதம் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி மாவட்டநீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர் பாக, தென்மராட்சியிலுள்ள ஓர் இரா ணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்க ளான எல்.நந்தசேன (வயது 28), டபிள்யூ உதயகுமார (வயது 30) ஆகிய இருவரையும் சிறைச்சாலை அதிகாரிகள் கடந்த வெள்ளியன்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயமே, குறித்த இரு சிப்பாய்களையும் தொடர்ந்து இம் மாதம் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(இ-109)

## தாபரிப்பு கட்டத் தவறியவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

மனைவியைப் பிரிந்து வாழும் கணவர் ஒருவருக்கு தாபரிப்பு கட் டத் தவறியமைக்காக யாழ். நீதி மன்றத்தினால் ஆறு மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

யாழ். மாநகரசபை ஊழியரான சின்னத்தம்பி ரஞ்சிதநாதன் என்ப வருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது.

இவருக்கு எதிராக இவரது மனைவி நீதிமன்றத்தில் மனுவொன் றினை தமது சட்டத்தரணி மூலம் தாக்கல் செய்திருந்தார்.

சம்பந்தப்பட்ட நபர் யாழ். நீதி மன்றில் ஆஜரான போது தாபரிப்பு கட்டத் தவறியமையினாலும் - நீதிமன்ற அழைப்பினை ஏற்று வழக்குகளுக்கு சமுகமளிக்காமை யினாலும் - மேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

(இ-5-6)

## செஞ்சிலுவை மூலம் உடல் புலிகளிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

நீர்வேலியில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்த தாகத் தெரிவித்து, இராணுவத்தி னரால் கடந்த வெள்ளிக்கிழமை அன்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்ப டைக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப் பினர் ஒருவரின் உடல் நேற்று முன் தினம் அவர்களிடம் ஒப்ப டைப்பதற் காக எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்று முன்தினம் காலை யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து சடலத்தைப் பொறுப் பேற்ற இராணுவத்தினர் தமது வாகன மூலம் குருநகர் இறங் குதுறைக்கு எடுத்துச் சென்றனர்.

குருநகர் இறங்குதுறையில் வைத்து அந்தச் சடலத்தைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவை சர்வ தேசக் குழுவினர் தமது படகு மூலம் பூநகரி கல்முனைக் கரைக்கு எடுத் துச்சென்றனர்.

(இ-15)

## தடுப்பு முகாமில் 13 வயதுச் சிறுமியும்

காங்கேசன்துறை பயங்கர வாத தடுப்பு முகாமில் நான்கு ஆண்களும் 13 வயதுச் சிறுமி ஒருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்த முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதிகாரி சட்டத்தரணி என்.ஜீவேஸ்வரா மேற்படி கைதிகளைப் பார்வையிட்டு அவர்களின் சேம நலன்கள் பற்றி விசாரித்தார்

(இ-5-6)

பிராந்திய கடற்றொழில்
மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி
372, பரங்சால் வீதி, யாழ்ப்பாணம்

## பெண்களுக்கான மீன்பிடி உதவியாளர் ஒன்றரை மாத காலப் பயிற்சி நெறி 2000

மேற்படி பயிற்சி நெறிக்கு தேர்வில் பங்குபற்றி தெரிவு செய்யப்படுவதற்கு பூர்த்தி செய்யப்பட்ட சுய விவர விண்ணப்பத்துடன் க. கூ. சங்கத் தலைவர் அல்லது கிராம சேவக அலுவலகரின் நற்சான்றிதழுடன் காரியாலயத்திற்கு பிற்பகல் 1.00 மணிக்கு முன்பாக சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தேர்வு 15, 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

வயது எல்லை: 18 — 35

கல்வித் தகைமை: ஆண்டு 8

ஏற்கனவே நடந்து முடிந்த 3 மாத கால பயிற்சிநெறிக்கு 75 ரூபா வழங்குவதற்கு பணிப்பாளர் அனுமதி அளித்துள்ளார்.

அதிபர்: இ. செபஸ்தியாம்பிள்ளை,
பி. க. க. எந்திரவியல் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(80466)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வயிரமுத்து நாகலிங்கம்

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயநிர்வாகசபை உறுப்பினரும், முது பெருந் தொண்டருமான

**வ. நாகலிங்கம் அவர்கள்**


11-11-2000 அன்று சிவபதமெய்தியதையிட்டு எமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
ஆலய பரிபாலன சபையினர்,
ஆலய வழிபடுநர் சபையினர்,
தொண்டர் சபையினர்,
அறநெறிப் பாடசாலை அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்,
தலையாழி,
கொக்குவில்.

(80486)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் பிரான்சிஸ் சவரிமுத்து

(கட்டட நிர்மாணிப்பாளர்)

தாயின் கரம் 02-10-1931 — இறைவன் கரம் 14-10-2000

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே!
மரணத்திலும் என்னை மறவாதிர்கள்."

அன்பான எங்கள் குலதெய்வமே!
அனைவரையும் அரவணைத்த தெய்வமே!
அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்,
குடும்பத்தின் தலைவனாய் எம் உயர்வுக்காக
நல்வாழ்வு காட்டிய எம் அன்பு ஐயாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய புனித சவேரியார் பாதம் தொழுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குளமங்கால்,
மல்லாகம்.

(80483)

## கவிதைப் போட்டி

வலிகாமம் தெற்கு, நவ. 13

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசை தினத்தையொட்டி கவிதைப் போட்டியினை நடத்த உள்ளனர்.

இந்தப்போட்டியில் வெற்றியீட்டுபவருக்கு கவிமாமணி விருது வழங்கப்பட உள்ளது.

கவிதைப் போட்டிக்கான விண்ணப்பங்களை இன்று திங்கட்கிழமை வரை செயலாளர், இந்துசமயப் பேரவை, ஏழாலை மேற்கு, ஏழாலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கவிதைப்போட்டிக்கான காலமும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பேரவையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## புத்தகம் கட்டுவதற்கு பயிற்சி

வலிகாமம் தெற்கு, நவ. 13

சுய தொழில் வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திறன் விருத்தி மையத்தினால் புத்தகம்கட்டுதல் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சீ. ஈ. சாதாரண தரம வரை கல்வி கற்றவர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஒவ்வொரு சனி, ஞாயிற்று கிழமைகளிலும் மூன்று மாதத்துக்கு தொடர்ச்சியாக நடைபெற உள்ள இப் பயிற்சி வகுப்புகளுக்குக்கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

டிசம்பர் இரண்டாம் திகதி ஆரம்பமாக உள்ளஇப் பயிற்சி நெறிக்கு இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-152]

## தலைவியாக சந்திரிகா தெரிவு

கொழும்பு, நவ. 13

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியாகவும் ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற் சங்கத்தின் தலைவியாகவும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது கட்சித் தலைவியாக ஜனாதிபதியை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க பிரேரிக்க அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான அதை ஆமோதித்தார். (ஐ-3)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ. 13

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மணவாளக் கோலத்தை ஒட்டிப் சங்காபிஷேகமும் பிற்பகலில் திருவூஞ்சலும், திருவீதியுலாவும் இடம்பெறவிருக்கின்றன. (3)

* ★ *

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் உள்ள ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் செய்துள்ளனர். (ஐ-135)

## ஆயுர்வேத ஆஸ்பத்திரி இடம்மாற்றம்

தென்மராட்சி, நவ. 13

கரவெட்டி பழைய ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த பளைப் பிரதேச சபை ஆயுர்வேத வைத்தியசாலை வதிரியிலுள்ள நெல்லியடி பட்டின சபை அலுவலகத்திற்கு அருகில் உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன்தெரிவித்தார். (ஐ-117)

## வாழ்த்துகின்றோம்

இன்று பிறந்த நாள் காணும்
அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை அதிபர்
**திரு. பொ. நடராசா அவர்களும்**
அரியாலை கிழக்கு அ. த. க. பாடசாலை அதிபர்
**திருமதி ப. அன்னலிங்கம் அவர்களும்**
அதிபர் தரம் 1 இற்கு
பதவி உயர்த்தப்பட்டுள்ளதையிட்டு
அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.
அவர்களது சேவைகள் தொடர எங்கள் நல்லாசிகள்.

ஆசிரியர் கழகம்,
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்,
யா/ அரியாலை கிழக்கு அ. த. க. பாடசாலை,
யா/ பூம்புகார் அ. த. க. பாடசாலை.

(80423)

## கண்ணீர் அஞ்சலி

சரசாலை மத்தி அம்பாள் மழலைகள் கல்விப் பூங்காவின் முன்னாள் அபிவிருத்திச் சபைத் தலைவரும் சா/ இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபருமான

**திரு. கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்**

அவர்களின் பிரிய பத்தினியும், இக் கல்விப் பூங்காவின் ஆசிரியையின்குருவும், இப்பூங்காவின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவரும், சா/ இந்துக்கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியையுமான

### திருமதி யோகாம்பாள் மகேஸ்வரன்

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியை, அபிவிருத்திச் சபை
அம்பாள் மழலைகள் கல்விப் பூங்கா

(80481)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா சிவயோகம்

கொக்குவில் கிழக்கைச்சேர்ந்த திருமதி இராசையா சிவயோகம் 11—11—2000 அன்று லண்டனில் காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- செல்லம்மா தம்பதிகளின் மகளும், P. இராசையாவின் அன்பு மனைவியும், வேலுப்பிள்ளை (கொழும்பு), சின்னத்தம்பி (லண்டன்), பொன்னுத்துரை (கல்வியங்காடு), காலஞ்சென்ற பேரம்பலம், சோமசுந்தரம் (யாழ்ப்பாணம்), தம்பிஐயா (கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சோமசுந்தரம்
(சகோதரர்).

யாழ்ப்பாணம்.

(80479)

### வைரமுத்து நல்லையா

(உரிமையாளர் அம்பிகா சவுண்ட், லைற் ஹவுஸ் உதயன் முகவர் — புலோலி)

வைரமுத்து நல்லையா நேற்றுமுன்தினம் மாலை காலமானார்.

அன்னார் அண்ணாவியார் பொன்னர் வைரமுத்து- வல்லாத்தை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், அம்பிகைபாகனின் அன்புத் தந்தையும், கலைச்செல்வியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி தங்கம்மா, சனகசபை (சின்னையா) திருமதிகள் இரத்தினம், சிவபாக்கியம், சரஸ்வதி, மனோன்மணி, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று பிற்பகல் நடைபெற்று புலோலி தெற்கு கருகம்பன் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன.

தகவல்:
S. தில்லைநாதன்
(மருமகன்).

துறையாமூலை,
மந்திகை,
புலோலி.

(சி/13808)

# கலந்துரையாடல்

## உலர் உணவு விநியோகம் சம்பந்தமாக

நிவாரணங்கள் வழங்குவது சம்பந்தமாக இன்று [13 - 11 - 2000] திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இதற்கு யாழ். குடாநாட்டிலுள்ள சகல பிரதேச செயலர்கள் / உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர் மற்றும் சகல ப.நோ.கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் தவறாது சமுகமளிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் சகல ப.நோ.கூ. சங்கத் தலைவர்களும், பொது முகாமையாளர்களும் தங்கள் சங்கத்தின் வசமுள்ள செயலகத்திற்குரிய நிவாரண உணவுப்பொருள் இருப்பு விவரங்களையும், இதேபோல் தங்கள் வசமுள்ள சங்கத்திற்குரிய உணவுப் பொருள்களின் விவரத்தையும் வரும்போது தவறாது கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திட்டப் பணிப்பாளர்.
யாழ். அரச அதிபருக்காக

(சி/13801)

# தசாக கிருகயக்ஞ அழைப்பு

## திருமதி இராஜேஸ்வரி அம்மா சண்முகானந்தக் குருக்கள்

விக்கிரம வருஷம் ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 06 — 11 — 2 K சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி இராஜேஸ்வரி அம்மா அவர்களது ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**தசாகம்:** ஐப்பசி மாதம் 29 ஆம் திகதி நாளை செவ்வாய்க்கிழமை (14 — 11 — 2K) காலை 10 மணியளவில்

**கிருகயக்ஞம்:** கார்த்திகை மாதம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (17 — 11 — 2 K) நண்பகல் 12 மணியளவில்.

மேற்படி கிரியைகளிலும், 17 — 11 — 2K வெள்ளிக்கிழமை நடைபெறும் சமாராதனையிலும் (மதிய போசனம்) கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் படி உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்.

மயிலணி,
சுன்னாகம்.

(சி-13800)

விண்ணக வாழ்வு எய்திய

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09 — 02 — 1921



உதிர்வு 15 — 10 — 2000

அமரர்

## தர்மலிங்கம் அருளானந்தம்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பதிகாரி)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே!
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்."

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ் மரியன்னை பேராலயத்திலும், ஏழாலை புனித இசிதோர் ஆலயத்திலும் நாளை (14.11.2000) செவ்வாய்க்கிழமை காலை 6.45 (பு. நே) மணிக்கு திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கற் திருப்பலிகளில் பங்கு கொண்டு அவரின் ஆத்தும இளைப்பாற்றுக்காக மன்றாடும்படி வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

தகவல்: மகன் அ. ஜெ. அன்ரன் ரவீந்திரா

தற்காலிக முகவரி:
ஏழாலை வடக்கு (மத்தி),
ஏழாலை.

நிரந்தர முகவரி:
60/1A, சல்மன் லேன்,
பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(86454)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை, கால், அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்

121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(79975)

# வெளி வந்து விட்டது!

2001 ஆம் ஆண்டிற்கான

## திருக்கணித பஞ்சாங்க மாதக்கலண்டர்

விலை ரூபா 50 மட்டுமே.

(80453)

# விக்னா கல்வி நிறுவனம்

A/L 2000 DAY CLASS

15—11—2000 (8 மணி)

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. விக்கி |
| அளவையியல் | — | திரு. சயந்தர் |
| தமிழ் | — | திரு. லிங்கம் |
| இந்துநாகரிகம் | — | திரு. பத்மராஜா |
| வரலாறு | — | திரு. அன்ரன் |
| புவியியல் | — | திரு. ஐங்கரன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. மதி |
| கிறிஸ்தவம் | — | திரு. வசந்தன் |

(80480)

# வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி.

## 2001 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

01) கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 20—11—2000 நண்பகல் 12.00 மணி வரை

02) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 21—11—2000 நண்பகல் 12.00 மணி வரை

03) கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 21—11—2000 பிற்பகல் 2.00 மணி

04) கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

05) மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதியில் தயாரித்து மூலப் பிரதியை இவ் அலுவலகக் கேள்விப் பெட்டியிலும் இணைப் பிரதியைப் பிரதேச உள்ளூராட்சி உதவியாளர் இல. 29, செட்டித்தெரு, நல்லூர் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

| | குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 01. | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 250/- | 2,000/- | 70,200/- |
| 02. | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 1,000/- | 13,200/- |
| 03. | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 50/- | 100/- | 440/- |
| 04. | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) | 500/- | 5,000/- | 7,28,200/- |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 01. | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 250/- | 2,000/- | 48,950/- |
| 02. | வாதரவத்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 250/- | 660/- |
| 03. | புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 8,800/- |
| 04. | ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 50/- | 100/- | 1,320/- |
| 05. | புத்தூர் பொதுச் சந்தை | 100/- | 250/- | 4,950/- |
| 06 | ஆவரங்கால் மீன் சந்தை | 25/- | 50/- | 350/- |
| | **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 01. | நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 100/- | 150/- | 3,500/- |
| 02. | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 50/- | 150/- | 1,200/- |
| 03. | நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 250/- | 1,000/- | 11,500/- |
| | **கோப்பாய் அலுவலகம்** | | | |
| 01. | கோப்பாய் வடக்கு சந்தை | 50/- | 150/- | 2,750/- |
| 02. | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 250/- | 1,500/- | 33,550/- |
| 03 | இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 300/- | 2,500/- | 73,150/- |
| 04. | இருபாலை மீன் சந்தை | 50/- | 150/- | 1,650/- |
| 05. | இருபாலைச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 2,475/- |
| 06. | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 2,475/- |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 01. | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 300/- | 2,500/- | 88,000/- |
| 02. | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 200/- | 1,000/- | 18,700/- |
| 03. | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 250/- | 2,000/- | 47,000/- |
| 04. | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 250/- | 4,000/- |
| 05. | உரும்பிராய் மத்திய சந்தை | 250/- | 1,500/- | 49,500/- |

பூ. குணசிங்கம்
ஜே. பி. யு. எம்.
தவிசாளர்.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி
2000—11—10

(சி/13803)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி
2000 ஆம் ஆண்டு தரம் 5 இல்
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

செல்வன் க. ராம் 172 புள்ளி மாவட்ட நிலை 27
செல்வன் ஜெ. கேசவன் 151 புள்ளி
செல்வன் வி. மதனராஜன் 139 புள்ளி

க. பொ. த. உயர்தரம் (1999) 2000 ஆண்டில்
பல்கலைக்கழகம் புகுந்த

செல்வன் ந. ராமதாஸ் செல்வன் தே. துஷ்யந்தன்
செல்வன் வே. நதுலன் செல்வன் செ. சுரேந்திரா
செல்வி வீ. சுகந்தினி செல்வி வி. கௌசிகா
செல்வன் ம. பிரசாந்தன்

ஆகிய மாணவர்களையும், இவர்களை வழி நடத்திய பெற்றோர்களையும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

வதிரி,
கரவெட்டி.
(80444)

# நூல் வெளியீடு

நூல்: "மாறிவரும் உலகு"

நூலாசிரியர்: திரு. இராம ஜெயபாலன்

காலம்: 15 - 11 - 2000 புதன்கிழமை
மாலை 4.00 மணி.

இடம்: வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்
சம்பியன் வீதி - கொக்குவில்.

## நிகழ்ச்சி

வரவேற்புரை: செல்வன் இ. முரளிதரன்
தலைமையுரை: செல்வன் யோ. தர்மேந்திரா
(மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
பிரதம விருந்தினர் உரை: திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரச அதிபர், யாழ் மாவட்டம்)
வெளியீட்டுரை: சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு. மா. சின்னத்தம்பி
(கல்வியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
நயவுரை: பேராசிரியர் திரு. கா. குகபாலன்
(புவியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
ஆய்வுரை: திரு. சோ. பத்மநாதன்
(அதிபர், ஆசிரிய கலாசாலை)
நன்றியுரை: திரு. இராம ஜெயபாலன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கடம்!

வளர்மதி முன்னேற்றக் கழகமும்,
சனசமூக நிலையமும்.

கொக்குவில்.
(80463)

# நெஞ்சம் நீங்கா
# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25
04
—
1925



உதிர்வு
08
-
11
-
1995

## திருமதி கமலாம்பாள் சுந்தரமூர்த்தி

(தொண்டமானாறு)

இல்லத்தின் ஒளிவிளக்காய், குடும்பத்தின் தலைவியாய், பாசத்தின் பிறப்பிடமாய் பண்பில் உயர்வாய் எமக்காக வாழ்ந்த உங்கள் நினைவு எம் மனதில் அன்றாடம் நினைவூட்ட ஆற்றாது உருகுகின்றோம். ஐந்து ஆண்டுகள் என்ன ஐயாயிரம் ஆண்டுகள் சென்றாலும் எம் உள்ளத்தில என்றென்றும் நிலைத்திருப்பீர்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்

210, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(80471)

# குருநகரில் துண்டுப் பிரசுரம்

குருநகர், நவ. 13

குருநகரிலுள்ள மீனவர்கள் தமது மதக் கடமைகளை நிறைவேற்ற வசதியாக ஞாயிறு தினங்களில் மீன்பிடிக்கச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று கோரும் துண்டுப் பிரசுரங்கள் குருநகரிலுள்ள பொது இடங்களில் காணப்படுகின்றன.

(இ-15)

# தலைமைத்துவப் பயிற்சி நெறி

வலி.மேற்கு, நவ. 13

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம மாதர், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு இம் மாதம் 17 ஆம் 18 ஆம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் பிரதேச செயலக மண்டபத்தில் தலைமைத்துவப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பொன்மலர் சிவானந்தன் மேற்கொண்டுள்ளார்.

(இ-175)

# 7 மாதங்கள் கழிந்தும் நியமனம் இல்லை

வலி. தென்மேற்கு, நவ. 13

யாழ் செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை முடிவடைந்து ஏழு மாதங்கள் கடந்தநிலையிலும் நியமனம் வழங்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகளில் பட்டதாரி சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களாகக்கடமையாற்றும 14 பேருக்கே மேற்படி நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது ஆனால் இதுவரை நிரந்தர நியமனத்துக்கான நடவடிக்கை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினால் மேற்கொள்ளப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெளிமாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்களில் பணிபுரிந்த பட்டதாரி சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் சமுர்த்தி முகாமையாளர்களாக நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-185)

# மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தி அடைந்தோர்

யாழ்ப்பாணம், நவ. 13

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் கடந்த மாசி மாதம் நடத்தப்பட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் 18 பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

இ. ஆனல்ட், எம். மரியசெல்வம், சி. ஏ. அரவிந்தன், என். ஜெயநந்தன், எல். கருணாநந்தன், ரி. அம்பிகைதாசன், ஆர். ராஜராஜன், (யாழ். பல்கலைக்கழகம்), கே. சிவகுமார் (இணுவில் கிழக்கு), எஸ் நெல்சன்கா (நாவாந்துறை), எஸ். நியூட்டன் (குருநகர்),

அ. சுரேந்திரன் (நாவாந்துறை), ஏ. ஆர். சைலேந்திரகுமார் (ஆனைக்கோட்டை), ஜே. நியோல்ரன், எஸ். மில்ர்சன்யூட், தி. மெல்சன் றெட்சன் (பாசையூர்); என். விஜயநாதன் (சுன்னாகம்), காஸ்டிக்கன்ஸ் (ஆனைக்கோட்டை), பி. ஸ்ரீதரன் (யாழ். பல்கலைக்கழகம்).

மேற்படி பரீட்சைக்கு 28 பேர் தோற்றியிருந்த போதும் 18 பேரே சித்தியடைந்துள்ளனர்.

(இ-10)

# பிரசுர அறிவித்தல்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் நடவடிக்கை முறைக்கோவையின் 528 ஆம் பிரிவின் கீழ் காலஞ்சென்ற கோண்டாவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த

சரவணமுத்து இரத்தினம்

என்ற மரணசாதனம் எதுவுமின்றி இறந்தவரின் மரணச் சொத்துக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் விடயம் தொடர்பாக.

கைலாசபிள்ளை சிவஞானமூர்த்தி
மஞ்சத்தடி, கோண்டாவில்.

மனுதாரர்

வழ. இல. தத்துவம்/17

எதிராக

1 வேலுப்பிள்ளை இராமலிங்கம்
கைம்பெண் பராசக்தி
2. கைலாசபிள்ளை யோகேஸ்வரன்
3. சுப்பிரமணியம் ஜெகநாதனும்
4. பெண் அருளானந்தபிள்ளையும்
எல்லோரும் மஞ்சத்தடி,
கோண்டாவில்.

எதிர் மனுதாரர்கள்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு காலஞ்சென்ற சரவணமுத்து இரத்தினம் என்பவருக்கு மனுதாரரும் 1 ஆம், 2 ஆம், 4 ஆம் எதிர்மனுதாரர்களும் வாரிசுகள் என்றும் குறித்த மனுதாரருக்கும் 1 ஆம், 2 ஆம், 4 ஆம் எதிர் மனுதாரர்களுக்கும் குறித்த காலஞ்சென்ற சரவணமுத்து இரத்தினம் என்பவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வாரிசுகள் சான்றிதழ்கள் வழங்குமாறும் கோரி 2000 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 4 ஆம் திகதி இம் மன்றில் ஆதரிக்கப்பட்ட போது மன்று 2000 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 06 ஆம் திகதிய கட்டளையின் பிரகாரம் அனுமதித்து பத்திரிகையில் பிரசுரம் செய்ய அனுமதித்திருந்ததென்றும்,

அக்கறையுள்ள ஆள் எவரும் 2000 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி மேற்கூறப்பட்டவாறு வாரிசுகள் சான்றிதழ் வழங்கப்படலாகாது என்பதற்கு ஏதாவது காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2000 ஆம் ஆண்டு
கார்த்திகை மாதம் 6 ஆம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
து. சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைந்தது
சாந்தா அபிமன்னசிங்கம்
மனுதாரரின் சட்டத்தரணி
(80415)

# ஈராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24
—
03
—
1959



ஆண்டவன் அடியில்
12
—
11
—
1998

## அமரர் வயிரன் கணேசலிங்கம்

(சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஊழியர்)

திதி: 13-11-2000

அன்பின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய்,
பாசத்தின் பிறப்பிடமாய் நேசக் கரம் நீட்டி
எம் நெஞ்சங்களில் தூய சுடரேற்றிய
எம் செல்வமே! குல விளக்கே!
அன்பூட்டி, அமுதூட்டி அரவணைத்த அப்பாவே!
பாலர் நாம் பாதையிலே நடந்திட
பாதி வழியில் பரிதவிக்க விட்டுச் சென்றீரே!
ஆதரிக்க ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அரவணைக்க ஆயிரம் உள்ளங்கள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க நீங்களில்லையே!
பொல்லாத பூமிதனில் நல்லோர்க்கு இடமில்லையென
காலனவன் எம்மை காலம் முழுவதும்
கண் கலங்கச் செய்திட்டான்
அப்பா! அவன் கவர்ந்தது உம் உயிரைத் தான்
ஆனால் உம் நினைவுகள் எம் உடலுடன் கலந்து
என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

உம் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், பெற்றோர்.
சகோதரர்கள், மாமா, மாமி,
மைத்துனர்கள்.

மிருசுவில் வடக்கு.
(80467)

உதயன்

## பேச்சும் போர் நிறுத்தமும்

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது நீண்ட காலமாகப் பேசப்படும் ஒரு விடயம். இதன் பொருட்டுத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்படுவது அவசியம்என பலதரப்புகளும் வலியுறுத்தி வந்தன; வருகின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் முதலாவது பதவிக்காலத்தில்— ஆறு வருடங்களில் அது சாத்தியமாகவில்லை. ஏதேதோ காரணங்கள், எத்தனையோ வித தட்டிக்கழிப்புகள், விதண்டா வாதங்கள், கடும் நிபந்தனைகள் என்று வெளிப்படுத்தப்பட்டு உருப்படியாக எதுவுமே ஆகாமல் அந்த ஆறு வருடங்களும் கழிந்தன.

இப்போது நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எடுத்த முயற்சியினால் அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை குறித்து அரசியல் வட்டாரங்களில் ஒரு புதுத் 'தெம்பு' பிறந்திருக்கிறது.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் சமாதானப் பேச்சுகளில் ஈடுபாடு காட்ட வேண்டிய தேவை உள்ளது.

நாட்டில் அமைதியும் சமாதானமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் உண்டாக வேண்டும். அப்போது தான் உதவிகளைச் செய்யலாம் என்று வெளிநாடுகள் கூறும் நிலை உருவாகிறது. நேரடியாக அழுத்தம் போடுவதற்குத் தயங்கினாலும் தமது மன அலைகளை மறைமுகமாக வெளிநாடுகள் அரசுக்கு உணர்த்தி இருக்கும் என நம்பலாம்.

அதனால் நோர்வேயின் சமாதான முயற்சியை விரும்பியோ, விரும்பாமலோ பற்றிக்கொள்ள அரசு முன்வந்தது.

நிபந்தனைகள் போட்டு — விடுதலைப் புலிகள் எவற்றைப் பேச விழைகின்றார்கள் என்பதனை அறிந்த பின்னர் —பேச்சை ஆரம்பிக்கலாம் என்று கருதுகிறார் ஜனாதிபதி. பேச்சை ஆரம்பிக்கும் முன்னர் ஏனைய கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என்பதும் ஜனாதிபதியின் நிலைப்பாடு.

இது ஓர் ஆரோக்கியமான வழிமுறையாகாது என்பதனை ஏற்கனவே இப்பத்தியில் எழுதியிருந்தோம். ஏனைய தரப்புகளுடன் கலந்தாலோசனை நடத்தினால், பேச்சுவார்த்தைகளுக்குக் கிளம்பும் எதிர்ப்பை தான் தனித்துச் சுமக்காமல எல்லோர் தலையிலும் கட்டி விடலாம் என்று அவர் கருதுகிறாரோ என்னவோ!

இரண்டு தரப்புகளும் நிபந்தனைகளை விதிக்காமலேயே பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க. அவர் கூறுவது போல, சுமூகமான பேச்சுக்களுக்கு நிபந்தனைகள் இல்லாதிருப்பதே பெரிதும் உதவும்.

ஆனால், யுத்த நிறுத்தம் இல்லை என்பதில் ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தினால் பல வகைகளாலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் (அது சில படிமுறைகளின் பிரகாரமாவது) நிறுத்தப்பட்டாலேயே பேச்சுவார்த்தையில் நம்பிக்கை பிறக்கும். அரசின் போர், விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே; தமிழர்களுக்கு எதிரானதல்ல என்று அரசு கூறுவதால்) தமிழ் மக்களுக்கு உண்டாகும் பாதிப்புகளை மறைத்து விட இயலாது. தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறையும் பேச்சுவார்த்தையில் பற்றுறுதியும் இருப்பின் அரசாங்கம் போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்து தனது நேர்மையை நிரூபிக்கவேண்டும்.

# ரஷ்ய விமானம் 58 பேருடன் இஸ்ரேலுக்குக் கடத்தப்பட்டது!

மொஸ்கோ, நவ. 13

58 பேருடன் கடத்தப்பட்ட ரஷ்ய விமானம் இஸ்ரேலில் தரையிறக்கப்பட்டுள்ளது கடத்தல்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்னேற்பாடுகள் வேகமாக நடைபெறுகின்றன.

நேற்று அதிகாலை ரஷ்ய விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான உள்ளூர் விமானம் 48 பயணிகள் மற்றும் 10 விமானப் பணியாளர்களுடன் ரஷ்யக் கரையோர நகரான மன்க்காச் செலாவிலிருந்து மொஸ்கோவுக்குச் செல்லும் வழியில் கடத்தப்பட்டது.

விமானத்தைக் கடத்திய 4 ஆயுததாரிகளும் இஸ்ரேல் விமானப்படைத் தளம் ஒன்றில் விமானத்தைத் தரை இறக்கச் செய்துள்ளனர்.

கடத்தல்காரர்கள் செச்சினியத் தீவிரவாதிகளாக இருக்கலாம் என்று ரஷ்ய அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ள அதேவேளையில், இஸ்லாமியர்களான கடத்தல்காரர்கள் பலஸ்தீனத் தீவிரவாதிகளிடம் தாம் செல்ல விரும்புவதாகக் கூறியுள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

விமானப் பயணிகளை விடுவிப்பதற்கான நிபந்தனைகள் எதனையும் இதுவரை கடத்தல்காரர்கள் அறிவிக்கவில்லை; அவர்களுடன் இஸ்ரேலிய அதிகாரிகள் உரையாட உதவுவதற்காக ரஷ்ய மொழிபெயர்ப்பாளர்கள் இஸ்ரேல் சென்றுள்ளனர்.

இதற்கிடையில், மேற்காசியப் பிரச்சினை தொடர்பாக அதிபர் கிளின்ரனுடன் பேச்சு நடத்த அமெரிக்கா சென்றிருந்த இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் உடனடியாக நாடு திரும்புவதாகக் கூறப்படுகிறது. (ஒ-7)

## காஷ்மீர் பிரச்சினையில் கட்டார் அரசு

இந்தியாவும் பாகிஸ்தானும் விரும்பினால் காஷ்மீர்ப் பிரச்சினையில் தலையிட்டு சமரசம் செய்துவைக்க கட்டார் அரசு தயாராக உள்ளதாக கட்டார் நாட்டு வெளியுறவு அமைச்சர் ஷேக் முகம்மது பின் யாசின் தெரிவித்துள்ளார்.

சட்டாரில் நேற்றுமுன்தினம் நடந்த இஸ்லாமிய அமைப்புகளின் மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## பிஜியின் ஆட்சி அதிகாரங்களில் இந்திய வம்சாவளிக்குஇடமில்லை

### இடைக்காலப் பிரதமர் வலியுறுத்து

சுவா, நவ. 13

பிஜியின் ஆட்சி அதிகாரங்களில் இந்திய வம்சாவளியினர் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று இடைக்காலப் பிரதமர் லைசானியா கராசி தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'பினான்சியல் டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மேலும் அந்தப் பேட்டியில்- பிஜியில் அதிபர் மற்றும் பிரதமர் பதவிகளை பூர்வகுடிகள் மட்டுமே வகிக்க முடியும்; அதற்கேற்றவாறு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி விட்டு ஒன்றரை ஆண்டுகளில் தேர்தல் நடத்தப்படும்.

வந்தேறு குடிகளான இந்திய வம்சாவளியினர், அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதைத் தாங்கிக் கொள்ள முடியாது. ஆகவே அதிபர், பிரதமர் ஆகிய பதவிகளுக்கான தேர்தல்களில் பூர்வகுடிகள் மட்டுமே போட்டியிட வகை செய்யும்படி அரசமைப்புத்திருத்தப்படும் என்று கராசி தெரிவித்துள்ளார்.

பிஜியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய வம்சாவளிப் பிரதமர் மகேந்திர சௌத்ரி பதவி கவிழ்க்கப்பட்டபின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ள இடைக்கால அரசில் கராசி பிரதமராக உள்ளார். (ஒ-7)

## ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு பாகிஸ்தானுக்குள் நுழைய தடை

இஸ்லாமாபாத், நவ. 13

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாண அரசு ஆப்கானிஸ்தானுடனான எல்லையை மூடியுள்ளது. பல்வேறு முனைகளில் இருந்து ஆப்கானிஸ்தான் அகதிகள் பாகிஸ்தானுக்குள் நுழைவதைத் தடுக்கவே எல்லையை மூடும்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்தமுடிவு உடனடியாக அமுல்படுத்தப்படுவதாக வடமேற்கு மாகாண நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் அகதிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளதால்தமது மாகாணத்தில் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தான் அகதிகள் பாகிஸ்தானுக்குள் நுழைய முடியாதவாறு விதிக்கப்பட்டுள்ள தடை பொருத்தமற்ற மிக மோசமான நடவடிக்கையாகும் என்று ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் அரசுக்கு எதிரான கூட்டமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஒ-7)

## 4 மீனவர்கள் விடுதலை

திருவனந்தபுரம், நவ. 12

கடலில் மீன்பிடிக்கச் சென்ற போது வழி தவறி இலங்கைக் கடல் பரப்பில் நுழைந்ததால் இலங்கைக் கடற்படையினரால் கைதாகி சிறையில் அடைப்பட்ட தூத்துக்குடியைச் சேர்ந்த 4 மீனவர்கள் நேற்று முன்தினம் விடுதலையாகி விமானம் மூலம் திருவனந்தபுரம் அழைத்து வரப்பட்டனர்.

### நாளை

ஐப்பசி 29

செவ்வாய்க்கிழமை

திதி: திருதியை

முன்னிரவு 10.50 வரை

நட்சத்திரம்: மிருகசீரிடம்

பின்னிரவு 2. 22 வரை

சுபநேரம்: 10 37—12 07

ராகுகாலம்: 3 07– 4.37

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சிறுவர், சிறுமியர் சென்ற ரயிலில் தீப்பிடித்து 172 பேர் மரணம்!

வியன்னா, நவ. 13

ஒஸ்ட்ரியாவில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட ரயிலில் சென்ற சிறுவர், சிறுமியர் உட்பட 172 இளம் வயதினர் ரயிலில் பற்றிக் கொண்ட தீயில் கருகி உயிரிழந்தனர்.

மலை வாசஸ்தலம் ஒன்றில் இருந்து பனிச்சறுக்குப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக பனி மலை உச்சிக்கு இளைஞர்களும் யுவதிகளுமாக 180 பேர் ரயிலில் சென்றனர்.

அந்த ரயில் 3 கிலோமீற்றர் நீளமான சுரங்கப் பாதையினுள் சென்று கொண்டிருந்த போது திடீரென அதில் தீப்பிடித்து வேகமாகப் பரவியது

இந்த விபத்தில் 172 பேர் உடல் கருகியும் மூச்சுத் திணறியும் உயிரிழந்தனர். ஜேர்மனியைச் சேர்ந்த 8 இளைஞர்கள் மட்டும் ரயில் பெட்டியின் ஜன்னல் வழியாகக் குதித்து சுரங்கத்தை விட்டு வெளியேறி உயிர் தப்பியுள்ளனர்.

பனிக்காலக் கொண்டாட்டங்களில் குதூகலமாக இருந்த மலைப்பகுதி இந்தக் கோரச் சம்பவத்தினால் சோகமயமாகி உள்ளது (ஒ-7)

## வெள்ளையரின் பண்ணைகளை ஆக்கிரமித்தது சட்டவிரோதம்

### ஷிம்பாப்வே நீதிமன்றம் தீர்ப்பு

ஹராரே, நவ. 13

ஷிம்பாப்வேயில் வெள்ளையர்களின் பண்ணைகளை ஜனாதிபதி றொபேர்ட் முகாபே தலைமையிலான அரசு பலவந்தமாகக் கையகப்படுத்தியது சட்ட விரோதமானது என்று ஷிம்பாப்வே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் அந்தப் பண்ணைகளில் தங்கியுள்ள கறுப்பர் இன முன்னாள் சுதந்திரப் போராட்ட வீரர்களை 48 மணி நேரத்துக்குள் வெளியேற்றும்படி அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன் அரசமைப்பின் அடிப்படை உரிமைகளை அரசின் நடவடிக்கை மீறுவதாகவும் கூறியுள்ளது.

ஷிம்பாப்வேயில் வெள்ளை இனத்தவருக்குச் சொந்தமான பண்ணை நிலங்களை நஷ்டஈடு எதுவும் கொடுக்காமல், பலவந்தமாகப் பறிமுதல் செய்து அவற்றை கறுப்பின மக்களுக்கு விநியோகிக்கும் அதிபர் முகபேயின் நடவடிக்கையை நிறுத்தக் கோரி வெள்ளை இனப் பண்ணையாளர்கள் சங்கம் தாக்கல் செய்த வழக்கிலேயே உயர் நீதிமன்றம் தற்போது தீர்ப்பு வழங்கியுள்ளது. (ஒ-7)

### உலக அரங்கில்

## வெளிநாட்டவர்களுக்கு எதிரான நாஜி கட்சியைத தடை செய்யும் கோரிக்கை ஜேர்மனியில் தீவிரம்

பேர்லின், நவ. 12

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவருக்கு எதிரான போக்குடைய தேசிய ஜனநாயகக் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

நாஜிக் கொள்கைகளுக்கு எதிரான பேர்லினில் நடந்த பேரணியில் 2 லட்சத்துக்கும் அதிகமான ஜேர்மனியர்கள் கலந்து கொண்டு நாஜி இனவாதக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதை அடுத்தே நாஜி கொள்கைகளைக் கடைப்பிடித்து வரும் தேசிய ஜனநாயகக் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் மற்றைய கட்சிகளால் தீவிரமாக எழுப்பப்பட்டுள்ளது.

சுமார் 6 ஆயிரம் பேரை உறுப்பினராகக் கொண்ட தேசிய ஜனநாயகக் கட்சி இலங்கையர் உட்பட வெளிநாட்டவருக்கெதிரான தாக்குதல்களை மேற்கொள்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுவருகிறது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர், ஹிட்லரின் கொள்கைகளை உடைய நாஜிக்கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

### உதயவாக்கு

அதிகம் செய்வதாய் வாக்குறுதி அளிப்பவனிடமிருந்து எதனையும் எதிர்பாராதே.

-இத்தாலி அறிஞர்

## பங்குச்சந்தையில் விலை சரிவு

வாஷிங்ரன், நவ. 13

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலின் முடிவை அறிவிப்பதில் தொடர்ந்து இழுபறி நிலை தொடர்வதால் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பங்கு விலைகளில சரிவு ஏற்பட்டுள்ளது.

தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்குகள் மிக மோசமான விலைச்சரிவைச் சந்தித்துள்ளன..

## பாலியல் வல்லுறவில் சிறுவர்கள்

பேர்க்லி, நவ. 13

பனேர்தியில் பாதிக்கப்பட்ட பன்னிரண்டு வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஒன்பது சிறுவர்கள் பொலிஸாரால் தேடப்பட்டுவருகின்றனர்.

இந்தச் சம்பவம் கலிபோர்னியாவில் இடம் பெற்றுள்ளது.

பாடசாலை விட்டு வந்த சிறுமியைக் கடத்திச் சென்றே இவர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளனர். (ஐ-8)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கண்டி வீதி, எழுதுமட்டுவாழ் எனும் முகவரியைச் சேர்ந்த இராசரத்தினம் விமலதாசன் என்பவரது தேசிய அ.அட்டை (730293941V) 10.11.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புதிய வசந்தா தேநீர்ச்சாலை, இல. 14, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (80470)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள மெத்தையோடு கூடிய கட்டில்கள், அலுமாரிகள், தையல் மெசின்கள் (சிங்கர்), கதிரைகள், செற்றி, ஸ்பிறிங்கட்டில், **Dressing Table**, ஷோகேஸ், எவர்சில்வர் பாத்திரங்கள், டினர்செற், கிடாரங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. காலை 11.00 மணிக்கு முன்பு சந்திக்கவும். செ.தனபாலசிங்கம், 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (80458)

புடைவைக் கடைக்கு ஏற்ற அலுமாரிகள், குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/13804)

மேசைக் கண்ணாடி அலுமாரி, 3பேஸ் மோட்டர் 3HP., 3 6/7HP. பார்வையிடும் நேரம்: 2 p.m - 6p.m தொடர்புக்கு: 44/3, மணற்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (80407)

### சனிமாற்றம்

14.10.2000 - 11.04.2001 வரை சனி வக்கிர மாற்ற பலன்கள், 05.10.2000 - 01.02.2001 வரை வியாழ வக்கிர பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. ரூ. 10/- கணிப்பாசிரியர் - சத்யா, 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (80426)

### இலக்கியக் கட்டுரைகள்

நேரில் வருபவர்களுக்கு நூறு ரூபாவுக்குப் புத்தகம் தரப்படும். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்ற இலக்கிய விமர்சன நூல். (80421)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

யா/இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக மூக்குக் கண்ணாடி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: ஸ்ரூடியோ ராஜி, 114, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (80460)

### மணமகன் தேவை

கௌரவமான குடும்பம், அழகிய பெண், வயது 34+. மணமகன் இலங்கையில் உத்தியோகத்தர் அல்லது படித்து தொழில் வாய்ப்புடையவராக இருக்க வேண்டும். மிகச் சிறந்த சீதனம். தொடர்புக்கு: விள.இல.1134, மே/பா உதயன் (80295)

### தேவை

புத்தகங்கள் பொதி செய்யவும், வங்கிக் கணக்கு தமிழில் வைக்கவும் பொறுப்புக்ளில்லாத உதவியாளர் தேவை. சுயவிவரம், எதிர்பார்க்கும் சம்பளத்துடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: சி.எம். எஸ்.நாதன். 'லக்கி மகால்', பிரதான வீதி, இணுவில். (80468)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி கல்பேட் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்புக்கு: 3/1. மான்ஸ பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (80292)

### வவுனியாவில் சுற்றிவளைப்பு

வவுனியா நவ.13

வவுனியா நகரப் பகுதி படையினரால் நேற்று முன்தினம் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தச் சுற்றிவளைப்பு பகல் 11.30 மணி வரை நடைபெற்றது. இந்த நேரத்தில் எவரும் நகருக்குள் நுழையவோ நகரை விட்டு வெளியேறவோ அனுமதிக்கப்படவில்லை.

நகரில் இருந்த 'மக்கள் அனைவ'ரும் கந்தசாமி கோயிலடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். கடைகள் மற்றும் லொட்ஜ்களில் இருந்தவர்களும் அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். (இ)

---

ஐக்கியதீப சமூகப் பொருளாதாரக் கல்விக் கழகம்
நெடுந்தீவு

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிலைய மாணவன்

### செல்வன் சுந்தரலிங்கம் பகீரதன்

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று எமது கல்வி நிலையத்துக்கு பெருமை தேடித் தந்துள்ளார். இவரை வழி நடத்திய எமது ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகம்
**பழனி-பாபு கல்விநிலையம்,**
நெடுந்தீவு.

(C/13806)

---

இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேசம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

காங்கேசன்துறையிலுள்ள மின் நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதனால், 2000.11.15 ஆம் திகதியன்று காலை 9.30 மணி முதல் பி.ப. 01.30 மணி வரை மின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கும். இதனால் குடாநாட்டின் சில பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதைப் பாவனையாளர் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

இதன் காரணமாக மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக வருந்துகின்றேன்.


பிரதேச மின் பொறியியலாளர்,
*இலங்கை மின்சார சபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.*

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

(C/13797)

---

## COMPUTER & COMPUTER ACCESSORIES



இன்னும் சில கணனிகள் மட்டுமே!
கையிருப்பில் உள்ளதால்

**சந்தர்ப்பத்தை தவறவிடாது இன்றே நாடுங்கள்.**

நவீன முறையில் அதி உயர்ந்த தரத்தில்
**Computer Typing** செய்துகொள்ள

## SRI MURUGAN COMMUNICATION
### Computer system

303, K.K.S.Road, Jaffna. T.P - 021-2670, 3214, 3588

(C/13802)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யாழ்.பல்கலைக்கழக*
*சிரேஷ்ட பதவிநிலை*
*தொழில்நுட்ப உத்தியோகத்தர்*
*(புள்ளிவிவரவியல்)*

### திரு. சரவணமுத்து தேவதாசன்

Dip. (Hons), B.A.

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரை வாழ்த்துகின்றோம்.

- ★ தொழிற்சங்கவாதியாகவும், தலைவராகவும் செயற்பட்டவர்.
- ★ வடமராட்சி பிரஜைகள் குழுத் தலைவராக இருந்தவர்.
- ★ இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை ஆயுள்கால அங்கத்தவர், போசகராகக் கடமையாற்றியவர்.
- ★ இலங்கை விஞ்ஞான சங்க அறிவியற்பரப்பு யாழ்.கிளை செயலாளராக இருந்தவர்.
- ★ யாழ்.விஞ்ஞான சங்க 'சி' கிளை செயலாளராக (1996) கடமையாற்றியவர், அதன் செயற்குழு அங்கத்தவராக சேவை புரிந்தவர்.
- ★ சமூக சேவையாளர்.
- ★ ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் தர்மகர்த்தாவாகவும், செயலாளராகவும் ஆன்மீகக் கடமையாற்றியவர்.
- ★ இலங்கை சைவமன்ற யாத்திராதிபராக இருந்தவர்.
- ★ அகில இலங்கை கம்பன் கழக உறுப்பினராக இருந்தவர்.

*அவர்களது புதிய நியமனம் கண்டு அகமகிழ்வுடனும் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*யாழ்.பல்கலைக்கழக நண்பர்கள்*

(80465)

---

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகம் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

**குறிப்பு:-** இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**11.11.2000 (சனிக்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | 611,752 |
| 1. | அதிபர், ஆசிரியர்கள், இணைக்கப்பட்ட தென்மராட்சி ஆசிரியர்கள் - யா/கோப்பாய் மகாவித்தியாலயம் | 1,800 |
| 2. | ஓர் அன்பர் - கோட்டைக்காடு, மல்லாகம் | 200 |
| 3. | உ.காஞ்சனமாலா - ஏழாலை மேற்கு, சுன்னாகம் | 200 |
| 4. | ஓர் அன்பர் - அமரர் கனகையா கிருகாம்பிகை ஞாபகார்த்தமாக | 500 |
| 5. | ஒரு சகோதரி - பழம் கிணற்றடி, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி | 200 |
| 6. | அரச கால்நடை வைத்தியசாலை நலன்புரிச்சங்கம், யாழ்ப்பாணம் | 1,300 |
| 7. | அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் - யா/சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை | 2,850 |
| 8. | அதிபர், ஆசிரியர்கள் - யா/அருணோதயக் கல்லூரி, அளவெட்டி | 1,000 |
| 9. | ஒரு சகோதரர் - பண்டத்தரிப்பு | 1,000 |
| 10. | T.ரவீந்திரன் - சங்கானை | 250 |
| 11. | ஐயனார் ஆலய பரிபாலன சபை - சுழிபுரம் மேற்கு | 500 |
| 12. | திரு.ந.புண்ணியமூர்த்தி - சித்தன்கேணி | 150 |
| | மொத்தம் | 621,702 |

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சாவகச்சேரி நகர கிராம அலுவலர்
திரு. வைத்திலிங்கம் இராஜரத்தினம்
அவர்களின் அன்பு மாமியாரும்
சாவகச்சேரி நகர் மாதர்சங்கப் போஷகர்
திருமதி ருக்மணிதேவி இராஜரத்தினம்
அவர்களின் அன்புத் தாயாருமாகிய
புலோலியூர்

### திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

*டச் வீதி, சாவகச்சேரி.* (80484) **சாவகச்சேரி நகர் மாதர் சங்கம்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 26 |
| 05 | 10 |
| 1932 | 1999 |

### திருமதி இராசமணி கதிரவேலு

திதி:- 13-11-2000

இல்லத்து அரசியாகி, அன்னையாகி,
மாமியாகி, பேர்த்தியாகி, பூட்டியாகி
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

*அன்னை இல்லம், கைதடி வீதி, மானிப்பாய்.* (C/13809)

# சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் பக்கச் சார்பாக நடந்து கொள்கிறது

## ஈ.பி.டி.பி. அமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,நவ.13

சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் ஊடகத்துறைக்குரிய தர்மங்களை மீறி ஊடகவியலின் சுதந்திரங்களை துஷ்பிரயோகம் செய்து பக்கச் சார்பான அரசியல் செல்வாக்கை செலுத்தும் வகையில் சென்று கொண்டிருக்கிறது.

ஈ.பி.டி.பி. வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"யாழ்.பத்திரிகையாளர் நிமலராஜன விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர் என்று இப்போது குற்றஞ்சாட்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை அவர் உயிரோடு இருக்கும் போதே வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இப்போது இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க நிமலராஜன் உயிரோடு இல்லை" என்று சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்புக்கு மறுப்புத் தெரிவித்து வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றிலேயே ஈ.பி.டி.பி. இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலைக்கு உள்ளாகியதை எமது கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் இந்தச் சம்பவத்துக்கும் எமது கட்சிக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. எனினும் எமது கட்சியின் செயற்பாடுகளுக்கு மக்கள் வழங்கியுள்ள அங்கீகாரத்தை ஏற்றுக் கொள்ளவும் சகித்துக் கொள்ளவும் முடியாத சக்திகள் இந்த அசம்பாவிதத்துடன் எம்மையும் சம்பந்தப்படுத்தி சேறுபூசும் முயற்சியில் தீவிரமாகியுள்ளன. எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் சுட்டு விரலை நீட்டி குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றன. ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலையுண்ட சம்பவத்தின் உண்மையான பின்னணிகளை இனம் காணும் விசாரணைகளைத் திசை திருப்பி அரசியல் லாபம் தேட முனைகின்றன.

நிமலராஜன் படுகொலை தொடர்பாக சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் எமது கட்சியையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் குறிப்பிட்டு விடுத்துள்ள அறிக்கையின் தவறான முனைப்பை இட்டு நாம் எமது கருத்தை இங்கு தெளிவு படுத்துகின்றோம்.

முதலில் நிமலராஜன் படுகொலையைக் கண்டித்தே நாம் அறிக்கைவிடுத்திருந்தோம். அதனை சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் கருத்தில் எடுக்காது தவறவிட்டு விட்டு அப்படுகொலையை நாம் நியாயப்படுத்த முனைவதாகச் சித்திரிக்கும் கபடத்தனமான முயற்சியில் இறங்கிவிட்டமை வருத்தத்துக்குரியது.

முன்னரும் பல தடவைகளில் இது போன்ற கண்டனக் கணைகள் எம்மீது வீசப்பட்டதும் காலம் எங்களை நிரபராதிகளாக விடுவித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. உதாரணமாக மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ கொலையுண்ட சம்பவத்திற்காக எங்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையை இங்கு சுட்டிக்காட்டலாம்.

நிமலராஜனின் படுகொலையை கண்டிக்கும் அதேவேளை பத்திரிகையாளர் என்ற வரம்பை மீறி ஆபத்தான ஆயுத நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் இறங்க முனைவது இத்தகைய விபரீதங்களுக்கு வழிகோலிவிடும். என்ற உணர்தலை ஏற்படுத்தும் அக்கறையுடனேயே நாம் நிமலராஜனுக்கு இந்த ஆபத்து விளைந்ததுக்கான காரணங்கள் பற்றிய சந்தேகங்களைக் குறிப்பிட்டிருந்தோம்.

சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் இக் கொலைக்கு ஈ.பி.டி.பி. காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை அறிக்கை வடிவில் வெளிப்படுத்த முடியுமானால், எமக்கு இது தொடர்பாக இருக்கக் கூடிய சந்தேகங்களை நாம் வெளிப்படுத்தல் ஆகாது என கண்டிக்க முனைவதை ஊடகவியல் ஆராஜகம் எனச் சுட்டிக் காட்டுகின்றோம்.

அதேவேளை - சுதந்திர ஊடகவியலாளர் இயக்கத்தின் நடவடிக்கைகள் ஊடகத்துறைக்குரிய தர்மங்களை மீறி ஊடகவியலின் சுதந்திரங்களை துஷ்பிரயோகம் செய்து பக்கச் சார்பான அரசியல் செல்வாக்கைச் செலுத்தும் வகையில் சென்று கொண்டிருப்பதாக உணர்கின்றோம்.

இதற்கான உதாரணமாக அண்மையில் முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட பத்திரிகைத் துறைச் சேவை அனுபவங் கொண்ட செழியன் பேரின்பநாயகம் மற்றும் தினமுரசு ஆசிரியர் அற்புதராஜா நடராஜா, வானொலியியலாளர் அன்ரனி மரியதாஸ் ஆகியோரும் யாழ்ப்பாண மாநகர முதல்வர்கள் இருவர், பத்துக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஏழுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் இவ் இயக்கம் அனுஷ்டித்த படு செயற்கைத் தனமான மௌனம் விளங்குகின்றது.

இத்தகைய இரட்டைத்தன்மை நீங்கி சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் எல்லாப் படுகொலைகளையும் எல்லா மனித உரிமை மீறல்களையும் சமனானதாகக் கருதி தமது நடவடிக்கைகளை மேற்கொண்டால் தான் தமது இயக்கத்துக்குரிய நியாயாதிக்கத்தை கொண்டுள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். என்பதை வலியுறுத்துகின்றோம்.

தொடருகின்ற போர்ச்சூழல் ஆனது பல்வேறு நபர்களினதும் உயிர்களை காவு கொள்கிறது. பலர் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனினும் அறிந்தவர்கள்- தெரிந்தவர்கள்- பிரபல்யமானவர்கள் போன்றோரின் படுகொலைகளே கவனத்தை ஈர்க்கின்றன. எந்தவொரு மனிதனும் எந்தவொரு காரணத்திற்காகவும் உயிர்ப்பறிப்புக்கு இலக்காகுவதை சாதாரணமான நாகரிகமான சமூகம் ஏற்றுக் கொள்ளவும் மாட்டாது ; சீரணித்துக் கொள்ளவும் மாட்டாது.

போர்ச்சூழல் தொடரும் வரையில் பல மனித உயிர்கள் அநியாயமாக, அகாலமாக காவு கொள்ளப்படுவதைக் கண்டிக்கும் அதே சமயம் இத்தகைய உயிர்ப்பலி ஒவ்வொன்றையும் தடுத்து நிறுத்த ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்பாகும்-

என்று உள்ளது. (இ-7)

# வடமராட்சிப் பிரதேசத்தில் சந்தைப்படுத்தும் வசதி தேவை

## விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.13

மயிலியதனை, கெருடாவில், ஊரிக்காடு பகுதிகளில் உற்பத்தியான விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு இவ்வருடம் சந்தைப்படுத்தல் வசதி அளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வெங்காயம், புகையிலை மற்றும் உப உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட போதும் சந்தைப் படுத்தல் வசதி அளிக்கப்படாததால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபருக்கும், பருத்தித்துறை பிரதேச செயலருக்கும் எடுத்துக் கூறியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனக் கெருடாவில் வடக்கு விவசாயிகள் சம்மேளனம் விசனம் தெரிவித்துள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் மற்றும் புகையிலை தரமானவையாக இருந்த போதிலும் உரிய காலத்தில் சந்தை வசதி அளிக்கப்படாததால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்ட மேற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை -

மீனவர் பாதிப்புக்கு மீன்பிடி நிவாரணம் வழங்குவது போன்று, விவசாய செய்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கினால் உதவியாக இருக்குமென விவசாயிகள் அமைப்பு உறுப்பினர் சிவக்கொழுந்து தேவராஜா தெரிவித்தார். (இ-ஒ-185)

## கூட்டுறவாளர் கலந்துரையாடலில்

# பல்கலைக்கழக மட்டத்தில் கூட்டுறவுக் கல்விக்கு வலியுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.13

பல்கலைக்கழக மட்டத்தில் கூட்டுறவுக் கல்வி தொடர்பான துறை உருவாக்கப்பட வேண்டும் என்று கூட்டுறவாளர்கள் நடத்திய கலந்துரையாடலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டுறவுப் புனரமைப்புத் தொடர்பான ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) எஸ். கே.சண்முகநாதன், கூ.அ.உ. ஆணையாளர் (ப.பொருள்) சு.கணேசமூர்த்தி மற்றும் 37 கூட்டுறவு அமைப்புக்களின் தலைவர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

* சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்க அமைப்பினை பிராந்திய மட்டத்தில் அமைத்து அதிலிருந்து மாவட்ட சமாசத்தை அமைத்தல்.
* பாடசாலைகளில் கூட்டுறவுக் கல்வியை ஒரு பாடமாக போதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
* கூட்டுறவு வர்த்தக வங்கியினை நிறுவக்கூடிய வகையில் வங்கிச் சட்டங்களிலும், நிதிச்சட்டங்களிலும் மாற்றம் செய்தல்.
* பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளத்தில் அலவன்ஸ் வழங்கல்.
* கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்திரமாக இயங்குதல், சொத்துக் கொள்வனவு மற்றும் செயற்பாடுகள் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய வகையில் சட்டங்களைத் தாராளமாக்கல்.
* தவறுவிடும் பணியாளர்கள், உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் செயற்பாட்டினால் ஏற்படும் நட்டத்தை அவர்களிடமிருந்து அறவிடுதல்.
* கூட்டுறவுச்சங்க செயற்பாடுகளில் விதிக்கப்படும் ஜீ.எஸ்.ரி.வரி, மொத்த விற்பனை வரி, வருமான வரி, பாதுகாப்பு வரி, கலால்வரி, முத்திரை வரி போன்ற வரிகளை நீக்கும் வகையில் ~~சட்டத்தில்~~ திருத்தம் செய்தல்.
* கூட்டுறவுச் சங்கங்களில் சிரேஷ்ட முகாமையாளர், நடுத்தர முகாமையாளர் பதவி வகிப்பவர்களின் தெரிவு, இடமாற்றம் போன்றவற்றை செயற்படுத்த மாவட்ட மட்டத்தில் அமைப்பு ஒன்றை நிறுவுதல்.
* இதற்கு குறைந்த தரத்திலுள்ள பணியாளர்களை அந்தந்த முகாமைத்துவம் தெரிவு செய்ய அனுமதி வழங்கல்.
* கூட்டுறவுச் சங்கத்தில் கௌரவ சேவைக்கு வருபவர்கள் அந்தச் சங்கத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
* பொருளாதார ரீதியில் செயற்படக்கூடிய அளவுக்கு ப.நோ.கூ. சங்கங்களை சிறிய சங்கங்களாக மாற்றி அமைத்தல்.

(இ-ஒ-5-6)

# நாடு முழுவதும் 5 லட்சம் மாணவர்கள் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவர்

## அனுமதி அட்டைகள் அடுத்த வாரம்

அடுத்த மாதம் 11ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ள ஜீ.சி.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் ஐந்து லட்சத்து 62 ஆயிரம் மாணவர்கள் தோற்றவிருக்கின்றனர் என்று பரீட்சை ஆணையாளர் ஏ.எம்.ஆர்.பி.அமரக்கோன் தெரிவித்தார்.

வடக்கு -கிழக்கு உட்பட நாடு முழுவதும் நாலாயிரத்து 109 நிலையங்களில் இந்தப் பரீட்சை இடம் பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த இரு வாரங்களுக்குள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

இந்தப் பரீட்சை நடைமுறை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் இடம் பெறவுள்ளது. (ஜ-3)

# வெளிநோயாளர் மண்டப திறப்பு விழா

அளவெட்டி அரசினர் மத்திய மருத்துவமனை மகப்பேற்று விடுதி வெளிநோயாளர் மண்டபத் திறப்பு விழா இன்று காலை 10.30 மணிக்கு டாக்டர் வை.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உ.சிவபாதசுந்தரம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட பொறியியலாளர் கே.சிறிஸ்கந்தராசா, வலி வடக்கு பிரதேசபைத் தலைவர் திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-5-30)


# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின்
வணிகர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையான
சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் (J/300)

**திரு. வை. இராசரத்தினம்**

அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை**

அவர்கள் 04.11.2000 ஆம் திகதி இயற்கை எய்தியதையிட்டு வணிகர்களின் ஆழ்ந்த அனுதாபங்களை அவர்களது குடும்பத்தவர்களுக்கு தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கைத்தொழில் வணிகர் மன்றம்,**
**சாவகச்சேரி.**

(80495)


# மரண அறிவித்தல்கள்

## கந்தர் பொன்னுத்துரை

கோண்டாவில் வடக்கு கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் பொன்னுத்துரை (பண்டா, பிரபல புறோக்கர்) நேற்று (12.11.2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லத்துரை, சிதம்பரபிள்ளை மற்றும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ஐயாத்துரை, தெய்வானைப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறிஸ்கந்தராசா, அருலேஸ்வரி, ஸ்ரீபாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானசோதி, சிவலோகநாதன், சூரியகலாதேவி ஆகியோரின் மாமனாரும் தனேஸ்குமார் (சுவிஸ்), தாமினி, ரஜீப்குமார், சிந்துஜா, பிரதீபன் (நோர்வே), அனுஷா, பிரசாந்தன் (நோர்வே), கவிதா (கனடா), சுனித்தா, துசிந்தா, நிவேதா, மதுரா, விதுரா (வவுனியா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.11.2000) திங்கள் பி.ப.1.00 மணியளவில் கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சிறிஸ்கந்தராசா (மகன்),
சிவலோகநாதன (மருமகன்)

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

(80497)

## செல்வி தமிழினி சுப்பிரமணியம்

(2000ஆம் ஆண்டு உயர்தரம், கலைப்பிரிவு - யா/மகாஜனக் கல்லூரி)

ஏழாலை தெற்கைச் சேர்ந்த செல்வி தமிழினி சுப்பிரமணியம் கடந்த வெள்ளிக்கிழமை (10.11.2000) அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை (11.11.2000) அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று ஏழாலை காடாகடம்பை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
இராமு சுப்பிரமணியம் (தந்தை)
(ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)
சு.சிவராமன் (சகோதரன்)
(உயர்தர மாணவன், 2001 - மகாஜனக் கல்லூரி)

*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.*

(C/13813)

## தம்பையா பாலசிங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், தற்போது நல்லூரில் வசித்தவருமாகிய தம்பையா பாலசிங்கம் அவர்கள் நேற்று (12.11.2000) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் பரிபூரணத்தின் அன்புக் கணவரும், பாலரூபன் (சுவிஸ்), பாலரூபி (சுவிஸ்), பாலமோகன் (இத்தாலி), பாலசுபாஜினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகதீஸ்வரி (ரூபி - சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சிவபாக்கியம், சிவனடியான், செல்வராஜா ஆகியோரின் மைத்துனரும், அபிநயன், அனுஷியா, ஜெனுஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.11.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சண்முகநாதன் யோகராஜா
(ஆனந்தி)

*50/23, செட்டித் தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(C/13815)

# ஒப்பந்தம் ஒன்று ஏற்படும் வரை யுத்தம் நிறுத்தப்படமாட்டாது!

## இராணுவத் தளபதி பலகல்ல அறிவிப்பு

கொழும்பு,நவ.13

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் எதிர்காலத்தில் நடத்தும் எந்தப பேச்சுவார்த்தைக்காகவும் யுத்த நிறுத்தம் செய்யப்படமாட்டாது. முழுமையான ஒப்பந்தம் ஒன்றில் விடுதலைப்புலிகள் கைச்சாத்திட்ட பின்னர் மட்டுமே யுத்தநிறுத்தம் சாத்தியமாகும்.



இவ்வாறு இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தாம் பலவீனமுற்று இருக்கும் வேளையிலேயே பிரபாகரன் சமாதானப் பேச்சுக்கு இணங்குவது வழக்கம். பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது அவர் தமது இராணுவ பலத்தை வளர்த்து முந்திய இழப்புக்களை ஈடுசெய்து கொள்வதே அனுபவம்.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் தாம் நேர்மையாக உள்ளனர் என்பதனை நிரூபிக்கும் விதத்தில் நம்பிக்கை தரும் யோசனைகளுடன் முன்வரவேண்டும். பேச்சு வார்த்தைகளை அவர் தமது முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துவதை அனுமதிக்க இயலாது.

பிரபாகரன் தமது நேர்மையை நிரூபிப்பதற்கு ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு இணக்கம் தெரிவிப்பதோடு சில பகுதிகளில் இருந்து தமது அணிகளை வாபஸ் பெறலாம்.

இராணுவத்தினர் சமாதானத்துக்கோ சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கோ எதிரானவர்கள் அல்லர். ஆனால் புலிகளின் நேர்மையை உத்தரவாதம் செய்து கொள்ளாமல் பேச்சுவார்த்தைக்கு இணங்குவதை - முந்திய தவறுகளை - தடுப்பதே எமது நோக்கம்.

சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாகவும், இராணுவம் மேற்கொண்ட தளர்ச்சியற்ற தாக்குதல்களினால் உண்டான பெரும் இழப்புக்கள் காரணமாகவுமே விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு இணங்கியுள்ளனர் - என்று இராணுவத் தளபதி தெரிவித்தார்.

(அ)

# நான்கு ஆணைக்குழுக்களை அமைக்க அரசு இணங்கியது

கொழும்பு.நவ.13

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர பொது நிர்வாக ஆணைக்குழு, சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழு, சுதந்திர பொலீஸ் ஆணைக்குழு ஆகியவற்றை அமைப்பதற்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணி இணங்கியுள்ளதாக அமைச்சரும் அந்த முன்னணியின் செயலாளருமான டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பின்னர் அமைச்சர் ஜயரத்ன இத் தகவலைத் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஐ.தே.கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த நான்கு குழுக்களையும் அமைக்க அரசு இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டும் என்று ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நான்கு ஆணைக்குழுக்களையும் அமைக்க அரசு இணங்கியிருப்பது ஜனநாயக முறையில் ஓர் ஆரோக்கியமான நடவடிக்கை என்று ஐ.தே.கட்சி பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

(ஐ-3)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இம் மாதம் 30ஆம் திகதி வெளியாகும்

கொழும்பு,நவ.13

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் - மூன்றாம் தவணை முடிந்து பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னர் - வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.எம்.ஆர்.பி.அமரக்கோன் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை முடிவுகளை முன்கூட்டியே வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் தேர்தல் கடமைகளில் அலுவலக அதிகாரிகள் ஈடுபட்டிருந்ததால் திட்டமிட்டவாறு வெளியிட முடியவில்லை என்றும் - பரீட்சை முடிவுகளைத் தயாரிக்கும் பணிகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பரீட்சை முடிவுகள் அனேகமாக இம்மாதம் முப்பதாம் திகதி வியாழக்கிழமை வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

(ஐ-3)

# சந்திரிகா - பிரபாகரன் நேரடிப் பேச்சு; அமைச்சர்கள் பலரின் விருப்பம் இதுவே!

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் நேரில் சந்தித்து பேச்சு நடத்தவேண்டும். இதனையே பெரும்பாலான அமைச்சர்கள் விரும்புகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் டி.எம்.ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் விடுதலைப்புலிகளின் தலைவரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்து பேச்சு நடத்துவதன் மூலமே பேச்சு வார்த்தைகளில் ஏற்படக் கூடிய காலதாமதத்தைக் குறைத்துக் கொள்ளமுடியும். அத்துடன் பேச்சுகளில் இழுபறி நிலை காணப்படமாட்டாது. இதனாலேயே அமைச்சர்கள் பலரும் இதனை விரும்புகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ-7)

### இலங்கைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் கொடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்துக்கு முன்னர் அரசு சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையை உருவாக்கலாம் என்று - அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

### நோர்வேயுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை என்று தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பின்னர் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

ஆனால் தலைவர் பிரபாகரன் பேச்சு வார்த்தைகளுக்கான முன் தேவைகளைத் தெரிவித்திருந்தார் என்று விடுதலைப் புலிகளின் அறிக்கை குறிப்பிட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தமொன்றைக் கோரியிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன. இந்த முரண்பாடான தகவல்கள் குறித்து தெளிவு பெறுவதற்காகவே அரசாங்கம் நோர்வேயின் சமாதானத் தூதுவருடன் மீண்டும் பேசுவதற்கு விரும்புவதாக நம்பத் தகுந்த வேறு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அரசமைப்புச் சீர்திருத்தத்தை அரசாங்கம் மீண்டும் புதிய நகல் வடிவில் கொண்டுவரும் என்றும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பு பெறப்படும் என்றும் அமைச்சர் ஜயரத்னா தெரிவித்திருக்கிறார்.

பௌத்த மகா சங்கத்தினருடனும் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்படும் அரசமைப்புச் சீர்திருத்தத்தின் புதிய வடிவம் விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கும் அனுப்பி வைக்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

புதிய வடிவத்தைத் தயாரித்து முடிப்பதற்கு அனேகமாக மூன்று மாதங்கள் செல்லலாம் என்றும் அவர் சொன்னார்.

(அ-7)

### காங்கேசன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரைக்கு வரக்கூடிய வசதி இல்லாத காரணத்தால் இழுவைப் படகு மூலமே பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றனர். கடல் கொந்தளிப்பு காணப்படுவதால் பயணிகளைக் கப்பலில் ஏற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதால் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் வைத்துப் பயணிகளை ஏற்ற முயற்சி மேற்கொள்ளப் படுவதாக அறியவந்தது.

காங்கேசன்துறையில் கப்பல்கள் கரைக்கு வரக்கூடிய வசதி உள்ளதால் பயணிகள் எவ்வித சிரமும் இன்றி கப்பல்களில் ஏறக்கூடிய நிலைமை காணப்படுவதால் அங்கு வைத்து அவர்களை ஏற்ற முடியும் என ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இந்தச் சேவைகளுக்கு வழித்துணை வழங்கிவரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி இநத இரு கப்பல்களின் சேவைகள் பருத்தித்துறை வரை மட்டுமே நடத்த முடியும்.

மீண்டும் முத்தரப்பும் இணங்கும் பட்சத்திலேயே இந்த உடன்பாட்டில் மாற்றம் செய்யப்பட்டு கப்பல்களைக் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்ல முடியும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ-3)

### மலையக......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைகளை வைத்திருப்பதன் மூலம் மலையக மக்கள் இலகுவான முறையில் போக்குவரத்தில் ஈடுபட முடியும் என்றும் அரச துறைகளில் வேலை வாய்ப்புக்களைப்பெற வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை -

இந்த அடையாள அட்டை வழங்கும் திட்டம் மலையக மக்களைப் பாரபட்சமாக நடத்துவதற்கே வழி செய்யும் என்று மலையகத் தமிழ் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

வேறு நோக்கங்களுக்காகவே அரசு இத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரப் பார்க்கிறது என்று தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-6)

### இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படும் இடைக்கால நிர்வாக சபையால் பயன் ஏற்படப்போவதில்லை என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை -

இடைக்கால நிர்வாக சபை அமைக்க முன்னர் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் துணைத்தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு தாக்குதல் நிறுத்தம் அமுல் செய்த பின்னர் இடைக்கால நிர்வாக சபை அமைப்பதே நல்லது என்றும் அவ்வாறு இல்லாது விட்டால் அந்தச் சபை உறுப்பினர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படலாம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(ஐ-3)


புலமைப்பரிசில் திட்டம் 2001

விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்பார்ப்பிற்கு பாத்திரமான எமது புலமைப்பரிசில் திட்டம் 1ம் திகதி முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி புலமைப்பரிசில் ஊடாக அடுத்த 3 வருடங்களில் தகவல் தொழில்நுட்பத்துறையில் (IT) நீங்கள் ஓர் பட்டதாரியாகும் சந்தர்ப்பம்

விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகங்களிலும், உங்கள் பகுதிகளில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி :

25/11/2000

IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



நாளை ஆரம்பம்!

A/L 2001
DAY CLASS

"சொத்து முடிபு செய்தல்"

9.00 மணி

கணக்கீடு
D.SAM

DMI

யாழ்.நகர் (C/13812)



வாடிக்கையாளர் கவனத்துக்கு!

மீண்டும் எமது ஸ்தாபனத்தில். பிளேற் (கிறைண்டிங் மில் உபகரணம்) வெட்டும் வேலை செய்யப்படுகின்றது. குறைந்த செலவில் தரமான முறையில் செய்து கொடுக்கப்படும்.

ஒரு சோடி பிளேற் வெட்ட 200/- மட்டுமே!

தொடர்பு:-

இந்திரன் மில்
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு.
(80293) (குளப்பிட்டிச் சந்தி)



விற்பனைக்கு

கேம்பிறிச் வான் விற்பனைக்குண்டு.
ENG - (S.T.D)

தொடர்பு:- சிற்றி மோட்டோர்ஸ்
நாக்கியபுலம்,
ஏழாலை, சுன்னாகம். (80488)





## மரண அறிவித்தல்

### செல்வன் ஸ்ரீதரன் நிரஞ்சன்

(பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் ஸ்ரீதரன் நிரஞ்சன் நேற்றுமுன்தினம் (11.11.2000) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பொலீஸ் அதிபர்(S.P) கந்தப்பு ஸ்ரீதரன்-இராஜேஸ்வரி தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற பொலீஸ் அதிபர்(S.P) வீ.கே.ஆறுமுகம், திருமதி இராசம்மா, காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கந்தப்பா, திருமதி சின்னம்மா ஆகியோரின் பேரனும் சாமினி, சிவாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று (12.11.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:-
டாக்டர் எம்.யோகேஸ்வரதேவன்
(பெரிய தகப்பன்)

'மீன பவனம்',
நெல்லியடி,
கரவெட்டி.

(C/13817)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.